பக்கங்கள் 8 ★

# ஈழநாடு The EELANAADU

50 சதம்

மலர் 22 பங்குனி 23 ஜ-அவ் 23 இதழ் 60
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 10-4-80

## சௌந்தரபாண்டியன் புதியகட்சி அமைத்தார்!

### தி. மு. க. கூட்டணியில் சேரலாம்?

சென்னை, ஏப். 9 முன்னாள் தமிழக அமைச்சர் திரு. பி சௌந்தரபாண்டியன் மக்கள் முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை அமைத்துள்ளார்.

அ.தி.மு.க. அமைச்சரவையில் ஹரிஜன நலத்துறை அமைச்சராகவிருந்து ராஜினாமாச் செய்த திரு. சௌந்தரபாண்டியன் அமைத்துள்ள இப்புதியகட்சி மறைந்த தலைவர் திரு. அண்ணாதுரையின் கொள்கைகளையே கொண்டிருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

நடைபெறவிருக்கும் தமிழக சட்டசபைத் தேர்தலில் இப் புதியகட்சி தி.மு.க.வுடன்...

(8ம் பக்கம் பார்க்க)

RECEIVED 1980-4-10 PERIODICALS DIVISION

# மத்தியகிழக்கு நாடுகள் சென்று பெண்கள் வேலை செய்ய தடை!

## அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசனை; உபகுழுவொன்று நியமிக்கப்பட்டது

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளிற்குச்சென்று பெண்கள் வேலை செய்வது தடை செய்யப்படலாம் என்றுதெரியவருகிறது.

நேற்று நடைபெற்ற மந்திரி சபைக்கூட்டத்தின்போது இது தொடர்பாக தீவிரமாக ஆராயப்பட்டபோதும் எதுவிதமுடிவும் எடுக்கப்படவில்லை.

மத்திய கிழக்கில் வேலைசெய்யும் பெண்கள் தொடர்பாக, தெரிவிக்கப்பட்ட பல்வேறு புகார்கள் தொடர்பாக நேற்றையகூட்டத்தில் ஆராயப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக மேலும் ஆராய்ந்து அடுத்த வாரம் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தொழில் அமைச்சர் திரு. கப்டன் ஜே. பி செனவிரத்தண, வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீட், கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. சிறில் மத்தியூ ஆகியோர் பணிக்கப்பட்டுள்ளனர்.

விட்டுப்பணிப் பெண்கள் போன்ற தரத்திலுள்ள வேலைகளுக்குச் செல்லும் பெண்களுக்கே தடைவிதிக்கப்படலாம் என்று நம்பப்படுகிறது. [ம-கு]

ஹன்சாட்டிலிருந்து அகற்றிவிடுமாறு

## சபாநாயகர் உத்தரவிடும் சொற்களைப் பிரசுரிக்கத்தடை!

[கொழும்பு]

பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்படும் உரைகளிலிருந்து அகற்றிவிடுமாறு சபாநாயகர் உத்தரவிடும் சொற்கள் கூற்றுக்களை வேண்டுமென்றே பிரசுரிப்பது தவறுகக்கருதப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று பாராளுமன்ற சிறப்புரிமைகள் சட்டமூலத்திற்கான திருத்தம் ஒன்றை பிரதமர் திரு. ஆர் பிரேமதாஸா நேற்று சபையில் சமர்ப்பித்தார்.

ஹன்சாட்டிலிருந்து அகற்றுமாறு சபாநாயகர் உத்தரவிடும் சொற்களை பத்திரிகைகள் பிரசுரித்தால் தண்டிக்கபட வேண்டும் என்பதே இச் சட்டத் திருத்தமாகும்.

இச்சட்டத்திருத்தத்திற்கு நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் திருத்தம் ஒன்றினைச்சமர்ப்பித்தார். சபாநாயகர் உத்தரவிட்ட பின்னர் பிரசுரிப்பதே தவருகக்கணிக்கப்படவேண்டும் என்பதே அவர் தெரிவித்த திருத்தமாகும்.

திரு. சிவசிதம்பரத்தின் திருத்தத்துடன் இச்சட்ட மூலம் நிறைவேறியது. (ம-கு)

ஈரானுக்கெதிராக ராணுவ நடவடிக்கை:

## அமெரிக்க பணயக்கைதிகள் கொலை செய்யப்படுவர்

### ஈரானிய மாணவர்கள் எச்சரிக்கை

தெஹ்ரான், ஏப் 9 ஈரானுக்கு எதிராக அமெரிக்கா ராணுவ நடவடிக்கையில் இறங்கினால் தெஹ்ரானிலுள்ள பணயக்கைதிகள் உடனடியாக கொலை செய்யப்படுவாகள் என்று ஈரானிய புரட்சி மாணவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

அமெரிக்க பணயக் கைதிகள் கொலை செய்யப்பட்டால் அமெரிக்க அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்று தெரிவித்துள்ள மாணவர்கள் உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் சில அதிகாரிகள் மீது விசாரணை நடத்தவிருப்பதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளையில் அமெரிக்காவிலுள்ள ஈரான் ராஜதந்திரிகளை நாட்டைவிட்டு வெளியேறுமாறு ஜனதிபதி கார்ட்டர் விடுத்த கட்டளையையடுத்து இன்று 35 ராஜதந்திரிகளும் தமது குடும்பங்களுடன் அமெரிக்காவிலிருந்து வெளியேறினர்கள். [கு]

## மிளகாய் விலை ரூ. 9-50 ஆக உயர்த்தப்பட்டது

(கொழும்பு)

மிளகாயின் விலையை ஒரு ரூபாவால் உயர்த்துவதென்று அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

இதன்படி மிளகாய் ரூத்தல் ஒன்று 9-50 சதமாக இருக்கும். சோயா அவரையின் விலையும் 25 சதத்தால் உயர்த்தப்பட்டுள்ளது. நேற்று விலையுயர்த்தப்பட்ட ஏனைய சில பொருட்களின் விலைகள் வருமாறு:

சோயாஅவரை 2-25 சதம், மஞ்சள் 7-50 பாசிப்பயறு 3 ரூபா, இஞ்சி 3 ரூபா.

[ம-கு]

## புதிய வேலை நேரம் இன்று முதல் அமுலுக்கு வரும்

(கொழும்பு)

அரசாங்க அலுவலகங்களில் இன்று முதல் புதிய வேலை நேரம் அமுலுக்கு வருகிறது.

புதிய திட்டத்தின்படி காலை 8-30 மணி முதல் மாலை 4-15 மணி வரை வேலை நேரம் இருக்கும்.

அரை மணித்தியாலம் சாப்பாட்டு இடைவேளை வழங்கப்படும்.

## எண்ணெ விநியோகத் தடை

தெஹ்ரான் ஏப்,9 ஈரானுக்கு எதிராக பொருளாதாரத் தடையைக் கொண்டு தருவதென்ற அமெரிக்காவின் முடிவுக்கு ஆதரவாக நடந்து கொள்ளும் சகல நாடுகளுக்கும் எண்ணெ விநியோகத்தை ஈரான் நிறுத்தும் என்று ஈரான் எண்ணெ வள அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடையால் ஈரான் எந்த விதத்திலும் பாதிக்காது என்றும் ஈரானிய அமைச்சர் தெரிவித்தார்

இதேவேளையில் பொருளாதாரத்தடையை மேற்கொள்ள வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கை தொடர்பாக ஆராய்வதற்காக 21 ஐரோப்பிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் இன்று கூடி ஆராயவுள்ளனர். (கு)

வெங்காய விதை

இறக்குமதி செய்யப்பட்ட பூசா ரெட்ரக வெங்காய விதைகள் இன்றுமுதல் கிடைக்கும்

உங்கள் தேவைக்கு!

பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்

107, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 5386

## தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறை!

### கல்வி அமைச்சரிடம் கூட்டணி எம். பி.க்கள் நேரில் சந்தித்து முறையீடு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கல்வி அமைச்சர் திரு. ரணில்விக்கிரமசிங்காவைச் சந்தித்துத் தமிழ்ப் பிரதேசங்களின் கல்வி பிரச்னை பற்றி ஆராய்ந்தனர்.

தமிழ் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் பற்றுக்குறை பற்றி இச்சந்திப்பின்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் [illegible] யர்களுக்கும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் தமிழ்ப் பிரதேசங்களில் நிலவிவரும் பற்றுக்குறை கல்விஅமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

பலவருட காலமாக விஞ்ஞான ஆசிரியர்கள் போதியளவில் தமிழ்ப்பிரதேசங்களில் நியமிக்கப்படவில்லையென்றும் எம். பி.க்கள் கல்வி அமைச்சரிடம் எடுத்துக்கூறினர்.

(8-ம் பக்கம் பார்க்க)

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க நிதிக்காக

● விரிவுரையாளர்கள் வழங்கும் "திசை மாறிய பறவைகள்"

● மாணவர்கள் வழங்கும் "கடலின் குழந்தைகள்"

யாழ். வீரசிங்கம் மண்டபம்: 10—04 80 மாலை 6-15

டிக்கட்டுகள் ரூ. 25/-, 10/-, 5/- மண்டப நுழைவாயிலில் பெற்றுக் கொள்ளலாம். 5449

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காட்சியறை நிலையிலுள்ள 34ஸ்ரீ தொடர் இலக்கம் கொண்ட டோயோட்டோ (TOYOTC லைறேஸ் HIACE) வேன் விற்பனைக்குண்டு. 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 5416

வெள்ளைநிற 6 மாத பெண் Pocket Dog (Pomnerian) விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: D ரகுராஜ், "புவனகிரி", சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் 5438

### தேவை

யாழ் நகரில் பிரபல்யம் வாய்ந்த மணிக்கூடுகள் திருத்தம் செய்யும் ஸ்தாபனத்துக்கு முகாமையாளர் தேவை. Sec-Agency and Acco-Tax Services, 1st Floor, 95, Stanly Road, Jaffna. 5437

தாதி பயிற்சி பெற விரும்புவோர் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி 15-4-80. முகவரி: டாக்டர் பி. எட்வேட் M.B.B.S. (H) இந்தியா, சுகவாசம் வைத்தியசாலை, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. 5436

### தவறிவிட்டது

1-4-80 யாழ் பெரியகடையில் எனது டயறி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அதில் உள்ள விலாசத்திற்கு அறிவிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். மூ. இராமலிங்கம், இடதுகரை, மூத்தையன்கட்டு. 5444

### காணவில்லை

எனது கலிகாரப் புத்திரன் பெயர் றங்கிரா. வயது 24, உயரம் 4'-9''. பொது நிறம், இடதுகாலை இழுத்து நடப்பவரும், தமிழ் சிங்களம் சரளமாக பேசக்கூடியவரும், இவரைப் பார்த்தவர்கள் இலரை தமிழர் என்றே சொல்லுவர். இவர் கீழ் குறிக்கப்பட்டுள்ள விலாசத்திலிருந்து 31-1-1980 தொடக்கம் தலைமறைவாகி விட்டார். இவரைப்பற்றிய தகவல் கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். சுப்பிரமணியம் றங்கநாதன், அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை. 5439

## கேள்விப்பத்திர அறிவித்தல்

பூநகரியில் சிரேஸ்ட உத்தியோகஸ்தர்களுக்கு வதிவிடம் அமைக்க கேள்விகள் கோரப்படுகின்றன.

ரூபா 100,000/-க்கு குறையாமல் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள், ரூபா 100/-யை பூநகரி நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் ஏப்ரல் 4ம் திகதி தொடக்கம் 18ம் திகதிக்கு முன்பாக செலுத்தி கேள்விப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகளை 22/04/1980-ம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக பிரதான பொறியியலாளர் (பெருந்தெருக்கள்) திணைக்களம் யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

Sgd. S. Ganesharatnam
பிரதான பொறியியலாளர்
(பெருந்தெருக்கள்)
யாழ்ப்பாணம்.

08/04/1980 5448


# மேர்ச்சன்ட்பினன்ஸ்லிமிட்.,

மாற்றத்தக்க நிலை வைப்புக்கள் மூலம் உயர்ந்த வருமானம் பெறலாம்.

## வருடம் 19% தொடக்கம் 24% வரையும்

ஒன்று தொடக்கம் ஐந்து வருடகால நிலை வைப்புக்களுக்கு வருடாவருடம் வட்டி கொடுக்கப்படும்.

ஆனல்
மாதாமாதம் வட்டி வேண்டுமாகில்

## வருடம் 18% தொடக்கம் 22% வரையும் வட்டி பெறலாம்.

ரூபா 5000/- த்திற்கும் அதற்குக் கூடிய வைப்புக்களுக்கும் மட்டுமே மாதாமாதம் வட்டி கொடுக்கப்படும்.

ஏற்கக்கூடிய மிகக்குறைந்த வைப்புப்பணம் ரூபா 1000 -

## நவீன சேமிப்பு வைப்புக்கள்

ஐந்து நாள் தொடக்கம் ஆறுமாத காலம்வரை முன் அறிவித்தலுடன் "செக்லெற்" மூலம்பணம் மீட்கலாம்.

வட்டி வருடம் 8% தொடக்கம் 15% வரை கொடுக்கப்படும். அத்துடன் உபரி (போனஸ்) லாபம் வருடம் 3% வருடாந்த இழிவுத்தொகையில் கொடுக்கப்படும்.

மற்றைய விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்.,
129, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
டெலி: 8183.

முகவர்நிலையம்,
மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்.,
52, ஐந்தாம் ஒழுங்கை,
கொழும்பு-3.
டெலி: 23973.

செ. லோகநாதன்
தலைவர்


## பின்னுறுக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற ஜெயக்குமார் ஸ்கொற் என்பவரது மரணசாதனமற்ற மரணச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன )
நியாயாதிக்கம் )
இல. ரி/3514

எட்வேர்ட் துரைசிங்கம் ஸ்கொற் கோப்பாய் தெற்கு
மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் கொண்ட குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு வைகாசி மாதம் 2-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதி மன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1980-ம் ஆண்டு தை மாதம் 25-ந் திகதி.

(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்,
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

வரைதல்:
(ஒப்பம்)
செ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி.
5443

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற லோறன்ஸ் எட்வேர்ட், 9/2 மூலை ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்பவரது மரண சாதனத்தின் மரணச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

எட்வேர்ட் ரேய் ஒஸ்ரின் பொன்ராஜ், 9/2, மூளாய் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
மனுதார்.

மரணசாதன )
நியாயாதிக்கம் )
இல: ரி/3513

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டுவைகாசிமாதம் 2-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1980-ம் ஆண்டு தை மாதம் 25-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

வரைதல்;
(ஒப்பம்)
செ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி.
5442

அச்சுவேலி கொலைவழக்கு:

# எண்மருக்கும் றிமாண்ட்; விசாரணை ஒத்திவைப்பு

(பாவிட்டபுரம்)

அச்சுவேலி மர்மக் கொலை சம்பந்தமான வழக்கின் விசாரணை, இம்மாதம் 28ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டு எதிரிகள் எண்மரும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

அச்சுவேலியைச் சேர்ந்த சுப்பையா துரைராஜா என்னும் விவசாயி கொலை செய்யப்பட்டு கிணற்றில் போடப்பட்டிருந்தது தொடர்பாக அவ்விடத்தைச் சேர்ந்த சின்னட்டி சீனியன், சீ. சின்னமணி (பெண்), முத்தன் வீமன், சிவலை துரைச்சாமி, கிட்டிணன் தாராசிங்கம், குட்டியன் இராசதுரை, ஜோசெப் நடராசா, முத்தன் கார்த்திகேசு ஆகியோர் மீது தொடரப்பட்டிருந்த வழக்கு மல்லாகம் நீதமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கெடுக்கப்பட்டபோது விசாரணையை இம்மாதம் 28ம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதி திரு. சி. ஆர். இராஜசிங்கம், எதிரிகளை தொடர்ந்து றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினமும், வழக்காளிதரப்பில சட்டத்தரணி சு. நடராசாவும் ஆஜராகினர்.

## சங்கானை பல நோக்குக் கூட்டுவுறச் சங்கம் மலிவு விற்பனை

வருடப்பிறப்பை முன்னிட்டு எமது கைத்தறி உற்பத்திப் பொருட்களின் விலை 10% குறைக்கப்பட்டுள்ளதை பாவனையாளருக்கு அறியத்தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்
சங்கானை.
8-4-80.
5447

## யாழ்ப்பாண மாநகரசபை யந்திரம் திருத்துபவர் (மெக்கானிக்) பதவி

மேற்கூறிய பதவிக்கு யாழ்ப்பாண மாநகர ஆணையாளரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

2. தகமைகள்.

(அ) விண்ணப்பதாரர் 20 வயதிற்குக் குறையாதவர்களாயும், 35 வயதிற்கு மேற்படாதவர்களாயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ ஆகக் குறைந்தது 8-ம் வகுப்பு அல்லது கனிஷ்ட தராதர வகுப்பில் சித்தியடைந்தவராக இருத்தல வேண்டும்.

(இ) பெற்றோல், டீசல் முதலியவற்றில் இயங்கும் லொறிகள், டிறைக்டர்கள், தெரு உருளைகள் முதலிய வாகனங்களின் யந்திரங்களை நுட்பமாகத் திருத்துவதில் திறமையுடையவர்களாகவும், அனுபவம் வாய்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. பதவிக்குரிய சம்பள விகிதம்:-
ரூ 3000 — 11 x 90 — 3990 00 வருடாந்தம். (அரசாங்கத்தினுல் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் படிகளும் வழங்கப்படும்)

விண்ணப்பங்கள் யாவும் இதிற் குறிப்பிட்ட சகல விபரங்களுடனும், தகமை, அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடனும், மாநகர ஆணையாளர் என முகவரியிடப்பட்டு 18-4-80ம் திகதிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

க. சிவஞானம்
ஆணையாளர்.
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்.
யாழ்ப்பாணம்,
2-4-80.
5446

## ரயில் பிரயாணியின் கடிகாரம் அபேஸ்

[மன்னார்]

தலைமன்னாரிலிருந்து ரயில் பாதையாக கொழும்புக்குச் சென்ற பிரயாணி ஒருவரின் கைக்கடிகாரம் பொல்காவலை ரயில் நிலையத்தில் வைத்து திருடர்களால் அபகரிக்கப்பட்டது.

பொல்காவலையில் ரயில் தரித்துநின்று புறப்பட்டபோது யன்னல்வழியாக திருடர்கள் கைக்கடிகாரத்தைப் பிடுங்கி எடுத்துவிட்டனராம.

## ரயில்முன் பாய்ந்தாராம்

ரயில்முன் பாய்ந்தார் என்று சந்தேகிக்கப்படும் பெண்மணி ஒருவரின் இருகால்களும் துண்டிக்கப்பட்டு. மதவாச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தலைமன்னாரிலிருந்து கொழும்புக்குச் சென்ற ரயில்வண்டி செட்டிகுளத்தில் தரித்துவிட்டுச் சென்றபோது இறம்பைக்குளம் என்னுமிடத்தில் இவ் விபத்து இடம்பெற்றது.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கண்டி வீதி, இல: 29/1ஐச் சேர்ந்த காலஞ்சென்ற முத்துக்குமாரு வின்சன்ட ஆசிர்வாதம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில், — மரணமெய்தியவர்

ஆசீர்வாதம் கைம்பெண் அந்தோனிப்பிள்ளை ரேசம்மா, 29/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம். — மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம் இல: 3409

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்தபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1980-ம் ஆண்டு சித்திரை மாதம் 11-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றிஅவ்வாறுபதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

பொ. பாக்கியநாதன்
1980-ம் ஆண்டு சித்திரை மாதம் 7-ம் திகதி.
5420

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உண்மையே கடமை; உண்மையே தவம்; உண்மையே யோகம்; உண்மையே தனி முதல்; உண்மையே பரமபுகலிடம். பெரும் மதிப்புணர்ச்சியுடன் உண்மைக்கு வணக்கம் செலுத்துக.

— சுவாமி சிவானந்த'

## மக்கள் கருத்து

### கதவுகள் திறக்குமா?

காந்தி ஞாபகார்த்த நிதியின் உதவியின்மூலம் 1949 ம் ஆண்டு அமைக்கப்பட்ட காந்தி நிலையத்தில் இயங்கிவந்த சனசமூக நிலையம் அரியாலை மேற்கில் இதுகாலவரையும் மிகவும் திறமையாக இயங்கிவந்தது. இது கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாகப் பூட்டப்பட்டுக்கிடக்கின்றது. இதனால் இப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் உலகத்தில் அன்றாடம் நடக்கின்ற செய்திகளைப்பற்றித் தெரிந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

இப்பகுதியில் வாழ்கின்ற மக்களில் பெரும்பாலானவர்கள் அன்றாடம் தொழில் செய்து வாழ்பவர்கள். சொந்தக் காசில் பத்திரிகை பார்க்கக் கூடிய வசதியற்றவர்கள். காந்தி சனசமூக நிலையத்தில் போடப்பட்ட பத்திரிகைகளை தான் தவறாமல் படித்துவந்த இப்பகுதிவாழ் மக்களில் பெரும்பாலார் இப்போது கிணற்றுத் தவளையின் நிலையில் இருக்கின்றார்கள் அறிவுப்பசிகொண்ட சிலர் தூரத்தேயுள்ள வேறு வாசிகசாலைகளுக்குச் சென்று பத்திரிகைகளைப் படிக்கின்றார்கள். பாடசாலையில் பயில்வோர் மிகவும் கஷ்டமுறுகின்றனர். இத்தனைக்கும் இச்சனசமூக நிலையம் பூட்டப்பட்ட காரணம் என்ன என்பதனை யாரும் அறிந்துகொள்ள முடியாமலிருக்கிறது. இக்காரணத்தைத் தெரிந்துகொள்ளவும், பூட்டப்பட்டுக் கிடக்கும் சனசமூக நிலயத்தை மீண்டும் திறப்பதற்கும் அவாக்கொண்ட சிலர் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கும், யாழ். மாநகராட்சிமன்ற ஆணையாளர் அலுவலகத்துக்கும் அடிக்கடி சென்று முறையிட்டனர். இதன் காரணமாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செயற்படாதிருக்கும் இச்சனசமூக நிலயத்தின் சொத்துக்கள் அத்தனையையும் பொறுப்பெடுத்து, மீண்டும் இச்சனசமூக நிலயத்தை இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கும்படி யாழ். மாநகராட்சி மன்றத்து ஆணையாளரைப் பணித்துள்ளதாக அறிவித்துள்ளார். ஆனால் யாழ். மாநகர ஆணையாளர் இவ்விஷயம் தொடர்பாக இதுவரையில் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. இவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்றும் புரியாமல் இருக்கின்றது.

பூட்டப்பட்டுக்கிடக்கும் இச்சனசமூக நிலயத்தைத் திறந்து முன்பு போலத் திறமையாக நடக்க நடவடிக்கை எடுக்கும்படி காந்தி சனசமூக நிலயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

-கா. பீதாம்பரம்
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

# போலிகடவுச்சீட்டுகள்மூலம்

## இந்தியா செல்லும் பிரயாணிகள்

(மன்னார்)

தலைமன்னார் பியர் துறைமுகத்தில் மூல கடவுச்சீட்டுக்கள் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பது, அதிகாரிகளின் போலிக் கையொப்பம் இடுவது, போலி சீல்கள் வைப்பது என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தலைமன்னார் பியரில் சன நெரிசல் கூடிய நேரத்தில் போலி கடவுச்சீட்டுக்கள் உபயோகித்த 40 பிரயாணிகள் குடியகல்வு அதிகாரிகளிடம் அகப்பட்டனர் இதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட உஷார்நடவடிக்கைகளில் தினமும் இத்துறைமுகத்தில் 2 பேர் போலிக்கடவுச்சீட்டுக்கள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்படிப் போலிக் கடவுச்சீட்டுக்களுடன் பிடிபடும் பிரயாணிகள் தமது தஸ்தாவேஜுகள் பெரும்பாலும் பொய்யானவை என்றும்அவர்களுக்கே உடனடியாகத் தெரிவதில்லைஎன்றும் விசாரணையின் போது தெரியவந்துள்ளதாக குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் திரு நியூட்டன் சமரசிங்கா தெரிவித்தார்.

பொருட்களைக் கொள்வனவு செய்யவென உள்ளூர் வர்த்தகர்கள் சார்பில் இவர்கள் கமிஷன் அடிப்படையில் இந்தியா செல்கின்றனர். உள்ளூர் வர்த்தகர்களே இவர்களுக்காக பாஸ்போட்டும் எடுக்கின்றனர். ஆனால் விசாரணைகள் நடைபெறும்போதுதான் தங்களின் கடவுச்சீட்டு போலியானவை என்று இவர்கள் அறிந்துகொள்கிறார்கள். இதன் விளைவாக விசாரணையின் பின்னர் இவர்கள் மோசடி விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படுகின்றனர்.'' என்று குடிவரவு குடியகல்வு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### இசை விழா நிகழ்ச்சிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் நடாத்தும தமிழ்இசை விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்:

மாலை 5-44 அண்ணாமலை இசைக்கல்லூரி மாணவர்கள் பாட்டு, 6-30 திருமதி சுந்தரலட்சுமி செல்வராசா-வீணை, திரு. எஸ், மகேந்திரன் - மிருதங்கம்,

7-45—9-00 திரு. ப. முத்துக்குமாரசாமி சர்மா-பாட்டு, திரு, க, சித்திவிநாயகம் - வயலின், திரு. எம். சிதம்பரநாதன் - மிருதங்கம்.

இவ்விசைவிழா நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறுகிறது. [ஈ]

மன்னாரில் சில பாடசாலைகளில்

### கல்விப்பணிப்பாளருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி!

[மன்னார்]

அதிகாரிகள் சகிதம் அண்மையில் மன்னாரில் உள்ள சில பாடசாலைகளைப் பார்வையிடச் சென்ற வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. மாணிக்கவாசகருக்கு பல அதிர்ச்சிச் சம்பவங்கள் காத்திருந்தன.

பலபாடசாலைகளிலும் ஆசிரியர்கள் இல்லாததாலேயே அவர் அதிர்ச்சியடைந்தார்.

ஒருபாடசாலையில் ஆசிரியர்கள் வரவுப்புத்தகத்தில் ஒப்பமிட்டிருந்தனர். ஆனால் 10 ஆசிரியர்கள் அப்பாடசாலையில் இருக்கவில்லை. எங்கே சென்றார்கள் என்று கேட்கப்பட்டபோது தகுந்த காரணங்கள் சொல்லப்படவில்லையாம்!

மற்றும் ஒரு பாடசாலையில் ஒரு ஆசிரியர் இருக்கவில்லையாம். எங்கே என்று கேட்கப்பட்டபோது அவரைப்பற்றிய விபரம் ஒன்றும் தெரியவில்லை என்று சொல்லப்பட்டதாம்.

### இடைக்கால ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி இலாகா புத்தாண்டையொட்டி இம்மாதம் 10ம் 11ம் திகதிகளில் இடைக் கால ஓய்வூதியப் பணம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

### ரௌத்திரி வருஷ உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவிலில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை ரௌத்திரி வருஷப் பிறப்புத் திருவிழா நடைபெறவிருக்கிறது

காலை 6 மணி தொடக்கம் விசேஷ பூசைகள் நடைபெற்று 7-45-க்கு சுவாமி வெளி வீதிக்கு வலம் வருவார். முற் பகல் 10 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும் 11-05 மணிக்கு வருஷப்பிறப்பு விசேஷ பூசைகளும் நடைபெறும்.

#### சாந்தையர் மடம்

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்திலும் வருஷப்பிறப்பு உற்சவம் நடைபெறவிருக்கிறது. (ஈ)

"கல்வியமைப்பு மாற்றங்களினால்

# தொடர்ச்சியான கல்வியின்றி

## மாணவர் பாதிக்கப்படுகின்றனர்"

— உடுப்பிட்டி எம். பி.

(நெல்லியடி)

"உயர்கல்வியை மட்டும் நோக்கமாகக் கொண்டு மாணவர்கள் கல்வியைக் கற்று அது கிடைக்காதபோது ஏமாற்றத்தினால் விரக்தியடையாது, சகல புறவேலைகளிலும் ஈடுபட்டு வந்தால்தான் தமது எதிர்காலத்தினை திடமானதாகவும் வளம் நிறைந்ததாகவும் ஆக்கிக் கொள்ளலாம்.''

மேற்கண்டவாறு உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம், உடுப்பிட்டிக் கல்வி வட்டாரத்தில் சிறந்த மாணவர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பாராட்டுவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வி, கே. ஈசுரபாதம் தலைமையில் திரு. த. இராசலிங்கம் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

"சிறந்த மாணவர்களாகத் தெரிவு செய்யப்படுவதற்குக் கல்வித் தகைமையை மட்டும் கணிக்கவில்லை. கல்வித் தகைமை 50 வீதமும் மிகுதி 50 வீதம் புறவேலைகளில் ஈடுபட்டதைக் கணித்துமே சிறந்த மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். நமது கல்வித் திட்டத்தின்கீழ் புறவேலைகளுக்கும் முக்கியம் கொடுக்கப்பட்டு வருவதனை அறியலாம்.

"தென்கிழக்காசியாவிலே இலங்கையே சிறந்த கல்வி ஞானத்தினை உடையது. ஆனால் அரசாங்கங்கள் அடிக்கடி மாறும்போது கல்வித்திட்டங்களையும் மாற்றியமைக்கின்றன. தொடர்ச்சியான கல்வியைப் பயிலும் சந்தர்ப்பம் மாணவருக்கு மறுக்கப்படுகின்றது. மாணவர்கள் தொடர்ச்சியானதுறையில் பயிலுவதன் மூலமே கல்வியிற் சிறக்க முடியும்.

"தமிழ் மாணவர்கள் பரீட்சையில் எவ்வளவுதூரம் நல்ல திறமைகளைக் காட்டினாலும் அவர்களுக்கு உயர்கல்வி மறுக்கப்படுகின்றது இது எமது இளைஞர்களின் எதிர்காலத்தைப் பயங்கர சூழ்நிலைக்குள்ளாக்குகின்றது. இளைஞர்கள் உயர்கல்வியிற் சமவாய்ப்பு இல்லாததால் விரக்தியின் விளிம்பிற்கு செல்லத்தூண்டப்படுகின்றார்கள். படித்தவர்க்கு உத்தியோகத்தை வழங்க அரசுகள் மறுத்தாலும் கல்வியில் பாகுபாட்டினைக் காட்டக்கூடாது, இதுவே உலக நாடுகளின் நடைமுறையும்.''

உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு. வி கே. ஈசுரபாதம் பேசுகையில் 'தனியார் டியூட்டரிகளுக்கு மாணவர்கள் செல்வதனால் அவர்கள் தமது விருப்பப்படி நேரத்தை வீணடிக்கின்றார்கள். அதே வேளையில் பாடசாலை வகுப்புக்களில் கரைச்சலையும் கொடுக்கின்றார்கள். பழைய காலத்தில் புறவேலைகளில் மாணவர்கள் ஈடுபடுவதனைப் பெற்றார்களும் மாணவர்களும் மிகவும் விரும்பினார்கள். ஆனால் அந்தநிலை இன்று மாறிவிட்டது'' என்றார்.

திருமதி ராஜேந்திரம், திருவாளர்கள் கே.குணரத்தினம், கே. குமாரசாமி, எம்.வேலுப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினார்கள். (அ)

### புத்தாண்டு விழாக் கலைநிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலக கலரச்சார மன்றம் வழங்கும் புத்தாண்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை யாழ் திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம்திரு. பி.எஸ். ஆறுமுகம்பிள்ளையின் நாதஸ்வரக்கச்சேரியும்,யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தினரின் வாளவாத்தியக்கச்சேரியும்.செல்விகள் ஸ்டெலா செபஸ்ரியாம்பிள்ளை"மனோஜ செபஸ்ரியாம்பிள்ளை'செல்வன் தளையசிங்கம் ஆகியோரின் நடன நிகழ்ச்சியும் கலாவிநோதன் கே.என்.கணபதிப்பிள்ளை (சின்னமணி) குழுவினரின்வில்லிசையும்"நர்த்தனாலய மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (கொ)

### இலங்கை கம்யூ. கட்சியின் அரசியல்குழு உறுப்பினர்கள்

(கொழும்பு)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 11-வது தேசிய மகாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட 50 பேரைக் கொண்ட மத்திய குழுவின் முதலாவது கூட்டம் கடந்த 5ம் திகதி நடைபெற்றது.

கட்சியின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய அரசியல் குழு அங்கத்தவர்களாக திருவாளர்கள்: கே பி. சில்வா, எஸ். ஏ. விக்கிரமசிங்கா, பீட்டர் கெனமன், எம்.ஜி மென்டிஸ், அ. வைத்திலிங்கம், எச். ஜி. எஸ். இரத்தினவீர, எல். டபிள்யூ. பண்டிதா, ஜே. ஏ. கே. பெரேரா, டி. டபிள்யூ. சிங்க, டி யூ. குணசேகர, ஜய திலக டி சில்வா, சரத்முத்தெட்டுவேகம, லெஸ்லி குணவர்த்தன, பீட்டர் ஜயசேகர அகா ஜனசேன ஆகியோரும் மத்திய குழுவின் பொதுச்செயலாளர், தலைவராக முறையே கே. பி. சில்வா, எஸ். ஐ. விக்கிரமசிங்கா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஏப்பரல் 19 ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள அடுத்த மத்திய குழுக்கூட்டத்தில் கட்சியின் ஏனைய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

### ஹானிமன் பிறந்த தினம்

(யாழ்ப்பாணம்)

ஹோமியோபதியின் தந்தை டாக்டர் சாமுவேல் ஹானிமன் பிறந்த தினம் இன்றாகும். அவரது 225வது பிறந்த தின ஞாபகார்த்த விழாவை வட இலங்கையின் ஹோமியோபதி சங்கம் இம்மாதம 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம பொதுசன நூல் நிலையத்திலுள்ள சாம் ஏ.சபாபதி மண்டபத்தில் கொண்டாடவுள்ளது.

இவ்விழாவில் யாழ்- அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, யாழ். மாநகர முதல்வர் திரு. இ. விசுவநாதன், யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன்,நல்லூர் எம். பி திரு மு. சிவசிதம்பரம், எதிர்க் கட்சி முதல்வர் திரு அ. அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இவ்விழாவின்போது எதிர்க்கட்சி முதல்வா திரு அ அமிர்தலிங்கம் சங்கத்தின் 21 வது ஆண்டு நிறைவையொட்டி மலர் ஒன்றை வெளியிடுவார்.

சங்கத்தினால் நடாத்தப்பெற்ற முதலாவது அக்குபங்சர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்கள் அரசாங்க அதிபரால் வழங்கப்படவிருக்கின்றது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(யாழ்ப்பாணம்)
மானிப்பாய் கலைக்கோயில் அதிபர் திருமதி லீலா செல்வராசாவின் மாணவியான செல்வி உஷாயினி பொன்னம்பலத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம் 14-ம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தம்பதிகளின் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்ச்சியில் யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் தம்பதிகளும், மானிப்பாய் பா. உ. திரு. வி. தர்மலிங்கமும் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வர். செல்வி உஷாயினியின் நடனத் தோற்றம் ஒன்றை மேலே காணலாம்.



# புதையல் எடுப்பதற்காக பச்சிளம் குழந்தை பலியிடப்பட்டதா?

[பதுளை]

பால்மணம் மாறாத பச்சிளம் குழந்தை ஒன்றைப் புதையல் பெறும் நோக்குடன் இருதுண்டுகளாக்கிப் பலிகொடுத்த பயங்கரச் சம்பவம் ஒன்று பதுளையில் இடம்பெற்றுள்ளது!

குடஓயா சங்கசக்கரை ஓரத்தில் ஒரு நரை வயதுப் பச்சிளம் குழந்தையின் உடலின் பேர்பகுதி கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து சில பயங்கர விபரங்கள் வெளியாகியுள்ளன.

கூரான ஆயுதம் ஒன்றினால் குழந்தையின் உடல் இரு கூறுக்கப்பட்டிருக்கலாம் என்று கருதும் பொலிசார் இப்பொழுது உடலின் மறுபகுதியைத் தேடி வருகின்றனர். இக்குழந்தை அடையாளம் காணப்படவில்லை.

குழந்தையின் தலை செந்நிறத் துணியொன்றினால் சுற்றப்பட்டிருந்தது. பாலூட்டும் போத்தல் ஒன்று, ஒரு தவாய், ஒரு சங்கிலி ஆகியவை இச்சடலத்தின் அருகே காணப்பட்டன.

சில பாதங்களுக்கு முன்னர் இதே இடத்தில் ஒரு குழந்தையின் கை அழுகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து புதையல் எடுக்கும் நோக்குடனேயே இப்பலிச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிசார் நம்புகின்றனர்.

பதுளை மாவட்ட நீதிபதி திரு. எல். எஸ். வி. பெரேரா ஸ்தலவிசாரணை நடத்தி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார். [இ]

# யாழ்ப்பாணத்தில் மேலதிக செயலகம் வேண்டும்

## அ. பொ. சே. தொ. சங்கம் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

சகல அரசாங்க காரியாலயங்களும் உள்ளடக்கக்கூடிய முறையில் மேலதிக அரசாங்க செயலகமொன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்க யாழ். மாவட்ட அரசாங்க அதிபரைக் கோருவதென அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்க யாழ் கிளையின் 31-வது ஆண்டு நிறைவுப் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் யாழ். கிளைத் தலைவர் திரு. கே. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்களில் சில வருமாறு:

"அரசாங்க ஊழியர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் விவாகப்படி இன்றைய வாழ்க்கைச் செலவுக்குப் போதாதுள்ளது. இன்றைய விலைவாசிக்கு ஏற்ப விவாகப் படியைக் கணிசமான அளவு உயர்த்தவேண்டும் என்றும் இடைநிறுத்தப்பட்ட விவாகப் படியை புதிதாகச் சேர்ந்த சகல ஊழியர்களுக்கும் வழங்க வேண்டுமென சம்பந்தப்பட்ட அமைச்சைக் கோருவது.

"சிற்றூழியர்களுக்கு வழங்கப்படும் சகல பதவி உயர்வுகளையும் அரசியல் ரீதியில் வழங்குவதைத் தவிர்த்து சேவை அடிப்படையில் வழங்கவேண்டும்.

"சகல இலாகாக்களிலும் ஐந்துநாட்கள் வேலைத்திட்டத்தை அமுலாக்கவும், காவலாளர்களுக்கு எட்டுமணித்தியாலங்கள் வேலைத்திட்டத்தை அமுலாக்கவும் தாய்ச்சங்க மூலம் உரிய அமைச்சைக் கோருவது.

"சகல இலாகாக்களிலும் ஓராண்டிற்குமேல் கடமையாற்றும் ஊழியர்களை நிரந்தரமாக்கவும், கனிஷ்ட ஊழியர்களின் காலிஇடங்களை நிரப்பவும், சகல இலாகாக்களிலும் தற்போதைய இலாகா அதிகாரிப்பு, அதிகாரிகள் அதிகரிப்புக்கு ஏற்ப கனிஷ்ட ஊழியர் எண்ணிக்கையையும் அதிகரிக்க உரிய அமைச்சைக் கோருவது.

"கனிஷ்ட ஊழியர்களாகிய காரியாலய தொழிலாளர்கள், பண்டசாலைக் காவலாளர்கள் ஆகியோருக்கு அரசகரும மொழித்தேர்ச்சியிலிருந்த விதிவிலக்களிக்கப்பட்டுள்ள அதே வேளையில் ஏனைய சகல தரப்பட்ட கனிஷ்ட ஊழியர்களுக்கும் விதிவிலக்கு அளிக்குமாறு எங்கள் சங்கத்தால் கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அமைச்சர் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சைச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

"கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் எங்கள் சங்கத்தால் யாழ். மாவட்ட அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டு, கலந்துரையாடப்பட்ட 22 கோரிக்கைகளில் நடைமுறைப்படுத்தப்படாத கோரிக்கைகளை கூடிய விரைவில் செயல்படுத்த வேண்டும்.

"பொதுநிர்வாக அமைச்சால் அண்மையில் வழங்கப்பட்ட சிற்றூழியர்களின் பதவி உயர்வுகள் சேவை அடிப்படையின்படி வழங்கப்படவில்லை. ஆகவே அவற்றை மறுபரிசீலனை செய்யவும், மேற்கொண்டு சேவை அடிப்படையின் பிரகாரம் உயர்வுகளை வழங்குமாறும் சங்கம் கோருகிறது.

"ஏனைய ஊழியர்களைப் போன்று கனிஷ்ட ஊழியர்களுக்கும் பாகுபாடின்றி 45 நாட்களை லீவாக வழங்குமாறு உரிய அமைச்சைத் தாய்ச்சங்கம் மூலம் சங்கம் கோருகிறது.

அரசாங்கம் உறுதியளிக்கப்பட்டதற்கிணங்க அரசகூட்டுத்தாபன ஊழியர்களுக்குக் குறைந்த விலையில் சைக்கிள் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய அமைச்சைக் கோருவது"

இக்கூட்டத்தில் திருவாளர்கள் எவ். என். டி. சில்வா, க. நவரத்தினம், எச். டி. டேவிட், என். கனகரத்தினம், சி. ஆறுமுகம் (பொதுச் செயலாளர்) த. நமசிவாயம், எஸ். விஜயானந்தன், எஸ். வீரசிங்கம், கே. செல்லத்தம்பி, ஏ. யோசேப், சி. தர்மலிங்கம், கே. சண்முகம், வி. குமாரசாமி ஆகியோரும் பேசினர். (கொ)

## என். எஸ். எம். ராமையாவின் "ஒரு கூடைக் கொழுந்து" சிறுகதைத் தொகுதி

(யாழ்ப்பாணம்)

பிரபல மலையக எழுத்தாளர் என் எஸ். எம். ராமையாவின் சிறுகதைகள் அடங்கிய தொகுதியொன்று 'ஒரு கூடைக் கொழுந்து' என்ற பெயரில் விரைவில் வெளிவரவிருக்கின்றது.

ஈழத்து முன்னோடி எழுத்தாளர்களில் ஒருவரான திரு. என். எஸ். எம். ராமையாவின் சிறுகதைகள் ஈழத்து பத்திரிகைகளில் மாத்திரமன்றி மஞ்சரி, தீபம் போன்ற தமிழக சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

வானொலியிலும் இவரது சிறுகதைகள், நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

இத் தொகுதியை 'வைகறை நிறுவனத்தினர் தங்களது இரண்டாவது வெளியீடாக வெளியிடுகின்றனர். இவர்களது முதலாவது வெளியீடு, தெளிவத்தை ஜோசப்பின் "நாமிருக்கும் நாடு" என்பது குறிப்பிடத்தக்கது.

## வித்தியாலயத்துக்கு ரூபா 10,000 ஒதுக்கீடு

(சித்தன்கேணி)

கணேச வித்தியாலய திருத்த வேலைகளுக்கு 1980ம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு தா [illegible] காசு ரூபா 10,000 [illegible] யுள்ளார்.

## சித்திரத்தேர் திருப்பணி

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சித்திரத்தேர் திருப்பணிச் சபையின் கூட்டம் இலுப்பையடி வயிரவர் கோவிலில் நடைபெற்றபோது பொதுமக்களிடமிருந்து நிதி சேகரித்து அமைக்கப்பட்ட அம்பாளின் சித்திரத்தேரை, கோயில் ஆதீனகர்த்தாக்களிடம் கையளிக்க முடியாதென்றும், தேரின் திருப்பணி வேலைகளை திரு. ச. பூபாலசிங்கம் தலைமையில் தொடர்ந்து மேற்கொண்டு முடிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தை மாதத்திற்கு முன்னர் திருப்பணி வேலைகளைச் செய்து முடிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

உண்மையில் இக்கோயில் [illegible] மடைந்த தம்பு தங்கத்துரைக்கு நிதி சேகரிக்கும் பொறுப்பு ட்டு தொண்டர்களையும் திருப்பணிச் சபையினர் நியமித்துள்ளனர்.

இக்கூட்டத்தில் திரு. ச. பாலமுத்துசிங்கம், திரு. செ. செந்தில்நாதன், திரு. சி. மருதபிள்ளை, திரு. அ. க. வேலுப்பிள்ளை, திரு. நா. பாமராசா ஆகியோர் அம்பாளின் பெருமை பற்றியும், திருப்பணி வேலைகள் பற்றியும் எடுத்துக்கூறினர். [கொ]

"ச. ச. நிலையங்கள்

# பத்திரிகைபடிக்கும் இடமாக மட்டும் இருக்கக்கூடாது"

(பண்டத்தரிப்பு)

"இன்றைய சூழ்நிலையில் சனசமூகநிலையங்கள் பத்திரிகை படிக்கும் நிலையங்களாக மாத்திரம் இயங்காது எமது பிரதேசத்தின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கும் பாடுபடவேண்டும். சமுதாய வட்டத்தில் மக்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தி அதன் மூலம் பல பிரயோசனமான சாதனைகளை சனசமூக நிலையங்களால் சாதிக்க முடியும்"

இவ்வாறு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ வலி தென் மேற்குக் கிளையின் புனரமைப்புக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் மேற்பார்வை உத்தியோகத்தர் திரு. கிருஷ்ணசாமி குறிப்பிட்டார்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. கிருஷ்ணசாமி தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது!- "சனசமூக நிலையங்கள் சிறப்பான முறையில் இயங்குவதற்குப் பொருளாதாரம் அவசியம் என்பதை அனைவரும் அறிவார்கள். தங்கள் பகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஒழுங்கைகள், சிறு வீதிகள் என்பனவற்றின் திருத்த வேலைகளை ஒப்பந்தம் செய்து நிறைவேற்றிக்கொடுப்பதன் மூலம் அதிக நிதியைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் ஊரிலுள்ள பணவசதி படைத்த பெரியார்களை நிலையத்தின் கௌரவ உறுப்பினர்களாகச் சேர்த்து நிலைய ஆண்டுவிழா, கலை விழா என்பனவற்றிற்கு அவர்களிடமிருந்து நிதிஉதவி, பரிசில்கள் உதவி ஆகியவைகளை பெற்றுக் கொள்ளலாம்.

வலி-மேற்கு சமாஜ கிளையின் தலைவர் திரு. சி. வரதராசா உரையாற்றுகையில் யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜம் சிறந்த முறையில் இயங்கினால் இப் பகுதியிலுள்ள சகல சனசமூக நிலையங்களும் சிறப்பாக இயங்குவதற்கு வழி வகுக்கும் இம் மாதம் 20ம் திகதி யாழ் நகரில் நடைபெறவிருக்கும் சமாஜ பொதுக்கூட்டத்திற்கு சகல உறுப்பினர்களும் தவறாது சமூகமளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: செ. இரத்தினம், உப தலைவர்: மா அற்புதகுணராசா, செயலாளர்: என். எம். கந்தசாமி, உப செயலாளர்: எஸ். துரைராசா, பொருளாளர்: வி. நடராசா நிர்வாக சபை உறுப்பினர்கள் ஆறுபேர் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

கொக்குவில்

## மயானம் சிரமதானமூலம் திருத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மயான பாதுகாப்புச் சபையினர் கொக்குவில் மயானத்தில் சிரமதான வேலையை மேற்கொண்டது. நிழல்தருமரங்களையும் நாட்டும் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இச்சிரமதானப் பணியில் மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்டிணர், கிளிநொச்சி மாவட்டப் பொறியியலாளர் திரு. மு. சந்திரசேகரம் மற்றும் கொக்குவில் இளைஞர் சங்க நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோரும் பங்குபற்றினர்.

சிரமதானத்தின்பின் மயான மடத்தில் சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு. பொ. சின்னத்துரை, உப தலைவர்கள்- திரு. சு. நாகலிங்கம், திரு. க. தர்மலிங்கம். காரியதரிசி- திரு. சோ சிவபாதசுந்தரம். தனாதிகாரி- திரு. இ. இராசநாயகம். நிர்வாகசபை உறுப்பினர்- திரு. கி. பாலகிட்ணர், திரு. ச. க முருகையா, மு. சந்திரசேகரம், ஐ. சண்முகம், க. பாலசுந்தரம், ந. மாதவகுமார், க. ஸ்ரீதரன்.

(கொ-அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "விவசாயிகளின் கோரிக்கைகளை அ.தி.மு.க அரசு அலட்சியம் செய்தது!"

## தமிழகத்தில் தனிக்கட்சி ஆட்சிக்கும் இடமில்லையாம்

### தொழிற்சங்கப் பிரமுகர் குமார் அளித்தபேட்டி

(யாழ்ப்பாணம்)

"விவசாயிகளுக்கு மதிப்பளிக்காமல் கடந்த இரண்டரை வருடகாலமாக அவர்களது கோரிக்கைகளை அண்ணா தி.மு.க. அலட்சியம் செய்ததினாலேயே அவரது ஆட்சியை எதிர்த்தோம்"

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த தென்ஆற்காடு, விழுப்புரம் வட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. கோ. குமார் அளித்த விசேடபேட்டியில் கூறினார்.

"தமிழகத்தில் இருக்கின்ற சுமார் இரண்டு கோடி விவசாயிகளை ஒரே தொழிற்சங்க அமைப்பின் கீழ் கொண்டு வரும் நோக்கோடு தமிழக விவசாயிகள் சங்கம் எனும் எமது அமைப்பு உருவாக்கப்பட்டது. சுமார் 1200 கிளைச் சங்கங்களையும் வட்டங்களையும் இச்சங்கம் கொண்டுள்ளது. இதன் தற்போதைய மாநிலத் தலைவராக திரு. சி. நாராயணசாமி நாயுடு இருக்கின்றார். விவசாயிகளிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, பாடுபடும் பாட்டாளி மக்களுக்கு ஒளிமயமான வாழ்வை வழங்குவதே இச் சங்கத்தின் நோக்கம். இதற்காக 9 அம்ச கோரிக்கை ஒன்றை எமது சங்கம் முன்வைத்துள்ளது. மின்சாரக்கட்டணங்களை எல்லாம் ஒரே கட்டணமாக்கி, அதாவது பாவிக்கிற மின்சார யூனிட்டுக்கு மட்டும் வாடகை வசூலிக்க வேணுமென்பதே எமது முதலாவது கோரிக்கை. கடன் நிவாரணம் எமது 2வது கோரிக்கை. விளைபொருளுக்கு நியாயவிலை வேண்டுமென்பது 3வது கோரிக்கை. நீர்ப்பாசன வசதிகள், உரவசதிகளை அதிகரிக்கவேண்டுமென்பது நாலாவது கோரிக்கை. இவ்விதமாக

-- பற்றிமாகரன் --

பல நியாயமான கோரிக்கைகளும் பயிர்ப்பாதுகாப்பு அதாவது பயிருக்கு நட்டம் ஏற்படுகையில் காப்புறுதி வேணும் என்பதும் எமது கோரிக்கையாக அமைந்துள்ளது" என்று அவர் விளக்கினார்.

கோரிக்கைகளைப் பற்றி எல்லாம் விரிவாக கூறினீர்கள். இவற்றைப் பற்றி அரசு எவ்வித நடவடிக்கை எடுத்தது என்று கூறுவீர்களா? என்று கேட்கப்பட்டபோது:

"இதுவரைகாலமும் ஆட்சிக்கு வந்தவர்கள் எல்லாம் வோட்டுக்காக தேர்தல்மேடைகளி... பல வாக்குறுதிகளை விவசாயிகளுக்கு அளிப்பார்கள் ஆனால் ஆட்சிக்கு வந்த பிறகு மறந்துவிடுவார்கள். திரு. எம். ஜி. ஆர். கூட முன்னர் விவசாயிகள் கோரிக்கையை நிறைவேற்றுவேன். என்று கூறியதால்தான் நாம் ஒற்றுமையாக வோட்டளித்து ஆட்சிக்கு கொண்டுவந்தோம். ஆட்சிக்கு வந்தபின்னர் கோரிக்கைகளை நிறைவேற்றாதது மாத்திரமல்ல எமது விவசாயத் தலைவர்களைச் சந்திக்கக்கூட அவர் மறுத்து விட்டார். அதுமட்டுமல்லமறியல் போராட்டம் நடத்திய விவசாயிகளை கூட பெருமளவில் கைதுசெய்தார். இதனால் நடந்துமுடிந்த லோகசபைத் தேர்தலில் அவரை எதிர்த்தோம். அவரும் படுதோல்வி அடைந்தார். இது விவசாயிகள் விழிப்புணர்ச்சி அடைந்துவிட்டார்கள், அவர்களால் தான் ஆட்சி அமைப்பவர்களை உருவாக்க முடியுமென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது" என்று திரு. குமார் கூறினார்.

திரு. கருணாநிதி, ஆர். வி. சுவாமிநாதன், எம். ஜி. ஆர். எல்லாம் உங்கள் தலைவரைத் தனித்தனியாக சந்தித்து, நடக்கபோகும் சட்டமன்ற தேர்தல்பற்றி ஆலோசனை நடத்தினார்களே. இதுபற்றி உங்கள் கருத்து" என்று கேட்கப்பட்டபோது "நடக்கப் போகும் சட்ட மன்றத்தேர்தலிலே நமது தலைவர் நாராயணசாமி நாயுடு எவ்விதமாக கட்டளையிடுகிறாரோ அதற்கு அடிபணிந்து நமது விவசாயிகள் நடப்பார்கள் என்றுமட்டும் தான இப்போது கூறமுடியும்" என்று பதிலளித்தார்.

"தமிழகத்திலே தனித்து ஒரு கட்சி வெற்றிபெற முடியாத அளவுக்கு எல்லாக் கட்சிகளுமே தவறுசெய்துவிட்டன. ஆனால் கூட்டாக தி. மு. க. —இந்திரா காங்கிரஸ் அணி பெருவெற்றியீட்டும் என்பதுதான் பொதுவான அபிப்பிராயம்" என்றும் அவர் கூறினார்.

"நாம் தமிழர் என்பதால் உங்கள் உணர்வுகளை எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. எங்கள் உணர்வுகளை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. நிச்சயமாக ஈழத்து மக்களின் பிரச்னைகள் பற்றி எமது மக்களுக்குநான் எடுத்துச் சொல்வேன் எனக்கு இப்படி ஒரு பேட்டி அளிக்க வாய்ப்பளித்த ஈழநாடு பத்திரிகைக்கு தமிழக விவசாயிகள் சார்பாகவும் எங்கள் சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு சார்பாகவும்நன்றி" என்றுகூறி முடித்தார் தமிழக விவசாயிகள் சங்கப்பிரமுகர் திரு. கோ குமார்.

### மக்கள்வங்கி

(சித்தன்கேணி)

காரைநகர் மக்களின் நெடுங்கால கோரிக்கையை தொடர்ந்து மக்கள் வங்கிக்கிளை ஒன்று வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசுவின் முயற்சியினால், காரைநகரில் நிறுவுவதற்கு நிதி அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

......

### இளம்தாய் தற்கொலை

[மாவிட்டபுரம்]

சமையல் தாமதமானதையிட்டு கணவன் ஏசியதால் மனமுடைந்த மனைவி நஞ்சருந்தி வாழ்வை முடித்துக் கொண்டார்!

ஏழாலையைச் சேர்ந்த சிவஞானம் பவளக்கொடி [31 வயது] என்பவரே மரணமானவராகும்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா இம்மரணம் குறித்து விசாரணை நடத்தினார்.

காலமானவரது கணவர் வெளியில் சென்றுவிட்டு பகல் 2 மணியளவில் வீட்டுக்கு வந்ததாகவும், அந்நேரம் வீட்டில் சமையல் முடியவில்லையென்றும், அதனையடுத்து கணவர், காலமானவரை ஏசவே இருவருக்குமிடையில் மனஸ்தாபம் ஏற்பட்டதாகவும் இதனால் சாப்பாடுகூட உண்ணாது கவலையுடன் காணப்பட்ட காலமானவர் பின்னர் வீட்டின் பின்புறமாகச்சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த கிருமிநாசினியை எடுத்து அருந்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கணவர் எஸ். சிவஞானம், மகன் சி. சாந்தரூபன் ஆகியோர் சாட்சியமளித்தனர். தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ் கான்ஸ்டபிள் இ. கந்தசாமி சாட்சிகளை ஆஜர் செய்தார்.

---

★ எம். ஜி. ஆர். கட்சியிலிருந்து

# பாலாபழனூரும் வெளியேறினர்

சென்னை, ஏப்.9

முன்னாள் மத்திய அமைச்சர் திரு. பாலாபழனூரர் அ. தி. மு. க.விலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்!

இவர் தமது ராஜினாமாக் கடிதத்தை அ. தி. மு. க. வின் பொதுச்செயலாளர் திரு.இரா நெடுஞ்செழியனிடம் அளித்துள்ளார்.

திரு. சரண்சிங்கின் காபந்து அரசாங்கத்தில் அ தி மு க சார்பில் திரு. பழனூரர் எரிபொருள் அமைச்சராக இருந்து இடையில் தமது பதவியை ராஜினாமாச் செய்தது தெரிந்ததே. (இ)

திருடப்பட்ட

# ரூ. 5 லட்சம் பெறுமதியான விக்கிரகங்கள் மீட்பு!

சென்னை, ஏப்,9

1978ம் ஆண்டு ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள சுப்பிரமணியம் என்ற கிராமத்திலிருக்கும் கோயிலிலிருந்து திருடப்பட்ட ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான மூன்று நடேசர், அம்பாள் விக்கிரகங்கள் நந்தனம் என்ற இடத்தில் மீட்கப்பட்டுள்ளன.

இந்த விக்கிரகங்களை மூவர் விற்கமுற்பட்டபோதே பொலிசார் இவற்றைக் கைப்பற்றியதுடன், மூவரையும் கைது செய்தனர்.

கடந்த மாதம் 26ம் திகதியும் சென்னை பொலிசார் திருநெல்வேலியில் இரண்டு திருட்டு விக்கிரகங்களைக் கைப்பற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# பூட்டோ மனைவி மகள் விடுதலை!

இஸ்லாமாபாத், ஏப்.9

கடந்த 6 மாதமாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த காலஞ்சென்ற முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோவின் மனைவி நுஷ்ரத் பூட்டோ மகள் பெனஷீர் பூட்டோ ஆகியோர் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களின் வீட்டுக் காவல் உத்தரவை கடந்த இரவு இராணுவ அரசு வாபஸ்பெற்றது. தாம் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டதை ஆட்சேபித்து அரசுக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ள வழக்கு விசாரணையில் இன்று இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராவார்கள். (இ)

### திருப்பணிச்சபை

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் திருப்பணிச்சபையின் நிர்வாகிகளாக தலைவர் .ச. பூபாலசிங்கம்'காரியதரிசி .வி. விசயரத்தினம், தனாதிகாரி .க. வேலுப்பிள்ளை' உபதனாதிகாரி நா. பரமராசா' நிர்வாகசபை அங்கத்தவர்களாக நா. குருசாமி' இ.வெள்ளியம்பலம் 'க' அருளானந்தம்' க. கிருஷ்ணர்' ச.சி. கந்தசாமி'கி . கணபதிப்பிள்ளை'செ செந்தில்நாதன் ,வி நடராசா'மு சபாநாதன்' த. ஆனந்தரத்தினம் ' க. கதிரேசு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (கொ)

......

### பயிற்சி நிலையம்

[சித்தன்கேணி]

பனம்பொருள் அபிவிருத்திச் சபை, வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசுவின் வேண்டுகோளுக்கிணங்க விரைவில் காரைநகர் நீலிப்பந்தனை மாதர் முன்னேற்றச் சங்கத்திலும் சித்தன்கேணிப் பகுதியிலும் இரண்டு பனவேலை பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க இருக்கின்றது. பயிற்சி நிலையங்களுக்கான இடங்களை வட்டு. எம். பி. தெரிவு செய்து அனுப்பினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நியுயோர்க், ஏப். 9

பெண்களுக்கு மார்பில்வரும் புற்றுநோயை முன்கூட்டியே அறிவிக்கக்கூடிய மார்புக் கச்சைகளைத் தயாரித்து விற்பனை செய்ய அமெரிக்க நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது இவ்வாண்டு இறுதிக்குள் இந்த மார்புக் கச்சைகள் விற்பனைக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. [இ]

தெல்லிப்பழைச் சம்பவம்:

# சிறுமி சந்திரா மரணம்; விசாரணை ஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை வேலைக்காரச் சிறுமி மர்ம மரணம் தொடர்பானமரண விசாரணை, உள்ளுறுப்புப் பரிசோதனை சம்பந்தமான அறிக்கை இன்னும் கிடைக்காத காரணத்தினால் இம்மாதம் 28-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த ஒருவரது வீட்டில் வேலைக்கிருந்த மலைநாட்டைச் சேர்ந்த சந்திரா எனப்படும் 12 வயதுச் சிறுமி அந்த வீட்டின் பின்புறத்திலுள்ள கொட்டிலினுள் கயிற்றில் தொங்கியபடி இறந்து கிடந்ததையடுத்து மல்லாகம் நீதிபதி திரு. சி ஆர். இராஜசிங்கம் ஸ்தலத்தில் விசாரணை நடத்தியதுடன் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு மரண விசாரணையை ஒத்திவைத்திருந்தார்.

மேற்படி சிறுமியின் சடலத்தை யாழ். சட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். சரவணபவன் பிரேதபரிசோதனை செய்து உள்ளுறுப்புக்களை மேலும் பகுப்பாய்வு செய்வதற்காக கொழும்பு இரசாயன பரிசோதனைப் பிரிவினருக்கு அனுப்பியிருந்தார்.

மேற்படி சிறுமியின் மரணம் தொடர்மான மரண விசாரணை மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மீண்டும் நடைபெறவிருந்தது அச்சமயம் யாழ் சட்ட வைத்திய அதிகாரி ஆஜராகி கொழும்பிலிருந்து அறிக்கை கிடைக்காமையால் வைத்திய அறிக்கையில் தாக்கல் செய்ய முடியவில்லை எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து நீதிபதி இம்மாதம் 28.ம் திகதிக்கு மரண விசாரணையை ஒத்திவைத்தார்.

மேற்படி சிறுமியின் மரண விசாரணையில், வீட்டுக் காரரின் மகனான கு. ...மயில்வாகனம் என்னும் வாலிபர் ஏற்கனவே சாட்சியமளித்துள்ளார். அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது:

"சம்பவதினம் வேலைக்காரச் சிறுமியையும், 80 வயது மூதாட்டி ஒருவரையும் வீட்டில் விட்டு மற்றைய எல்லோரும் அருகிலுள்ள கோயிலுக்குப் போயிருந்தோம். கோயிலிலிருந்து நான் இடையில் வீட்டைப் பார்த்துச் செல்வதற்காக வீட்டுக்கு வந்தபோது வேலைக்காரச்சிறுமி வீட்டின் பின்புறத்திலுள்ள கொட்டிலில் கயிற்றில் தொங்கியபடி கிடந்தார். நான் அருகில் சென்று பார்த்துவிட்டு பயத்தால் குழறினேன். அயலவர்கள் வந்து கயிற்றை அறுத்து சிறுமியை இறக்கியபோது அவர் மரணமடைந்திருந்தார்" என்றார்.

இம்மர்மமரணம் தொடர்பாக சுன்னாகம் பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

### பொன்னாலையில் உப-தபாற்கந்தோர்

(சித்தன்கேணி)

தொகுதிக்கு உபதபாற்கந்தோர் என்ற அரசாங்கத்தின் கொள்கைக்கிணங்க வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள பொன்னாலை என்ற கிராமத்தில் உபதபாற்கந்தோர் நிலையத்தை அமைக்குமாறு வட்டு. பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு தபால்தந்தி தொடர்புகள் அமைச்சுடன் தொடர்பு கொண்டதற்கிணங்க அமைச்சு அங்கீகரம் வழங்கியிருக்கின்றது.

மிக விரைவில் இங்கு உபதபால்கந்தோர் அமைப்பதற்கேற்ற நடவடிக்வககளில் வட்டு எம். பி. ஈடுபட்டிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பணயக் கைதிகள் விடுதலை முயற்சியை யு.எஸ். நடவடிக்கை பாதிக்கும்

## வால்ட்ஹெய்ம் கருத்து

நியூயோர்க், ஏப்ரல் 9

ஈரானுடனான ராஜதந்திர உறவுகளை அமெரிக்கா துண்டித்துள்ள நடவடிக்கை குறித்து ஐ. நா. பொதுச்செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை, ஈரானில் உள்ள பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பான பேச்சுவார்த்தை முயற்சிகளைப் பெரிதும் பாதித்துவிடும் என்று டாக்டர் வால்ட்ஹெய்ம் கருத்து தெரிவித்துள்ளார்.

### ஜப்பானிய பிரதமர் கருத்து

ஈரானுக்கு எதிரான அமெரிக்க நடவடிக்கை மனவருத்தத்தைத் தருகின்றபோதிலும் எவருமே புரிந்துகொள்ளக் கூடியதாகும் என்று ஜப்பானிய பிரதமர் திரு. ஒகிரு தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் செயல் வியப்பு எதையும் தரவில்லை என்று பெல்ஜியம் நெதர்லாந்து ஆகிய நாடுகள் கருத்து தெரிவித்துள்ளன. (இ)

# அஸாம் பிரச்னை பிரதமருடன் பேச்சுநடத்த மாணவர் நிபந்தனை

புதுடில்லி, ஏப்ரல் 9

வெளிமாநிலத்தவர் பிரச்னை தொடர்பாக அஸாம் மாநில மக்கள் சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தீர்வு ஒன்றை எட்டக் கூடிய விதத்தில் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியுடன் பேச்சு நடத்த தாம் தயாராக உள்ளதாக அனைத்து அஸாம் மாணவர் உலகம் அறிவித்துள்ளது.

அஸாம் வெளிமாநிலத்தவர் பிரச்னை தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்த முன்வருமாறு திருமதி இந்திரா காந்தி கடிதமூலம் விடுத்த அழைப்புக்குப் பதில் அளிக்கும்போதே மாணவர் சங்கம் பேச்சுவார்த்தைக்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

வெளிமாநிலத்தவர் இம்மாநிலத்தில் வசிப்பதற்கு எதிராக அஸாம் மாணவர்கள் கிளர்ச்சி செய்துவருவது தெரிந்ததே.

நீண்ட நாட்களாக நடைபெற்றுவரும் இக் கிளர்ச்சியை அடுத்து அஸாம் மாநிலத்தை கலவரப்பகுதியாகப் பிரகடனப்படுத்திய அரசு இராணுவச்சட்டத்தையும் இங்கு அமுல்படுத்தியுள்ளது

எனினும் நேற்று பெரும் தொகையான மக்கள் அரச அலுவலகங்கள் மத்தியில் சத்தியாக்கிரகம் செய்தனர் என்றும்-

அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் செய்த பலர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட அதேவேளையில் மற்றும் பலர் தாமாகவே வந்து கைதாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது (இ)

# பாலஸ்தீன மக்களின் சுயாட்சி கார்ட்டர்-சதாத் நீண்ட நேரம்பேச்சு

வாஷிங்டன், ஏப். 9

பாலஸ்தீன மக்களுக்கு சுயாட்சி வழங்குவது தொடர்பாக அமெரிக்க ஜனதிபதி திரு. ஜிம்மி கார்ட்டருடன் எகிப்திய அதிபர் ஜனப் அன்வர் சதாத் நேற்று நீண்ட நேரமாகப் பேச்சு நடத்தினார்.

பாலஸ்தீன மக்களுக்கு சுயாட்சி வழங்குவதில் எழுந்துள்ள முட்டுக்கட்டை குறித்து இவர்கள் விரிவான முறையில் பேச்சுவார்த்தை நடத்தியதாக வாஷிங்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

வைபவம் எதுவுமின்றி நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையின்போது ஜனப் சதாத்தே அதிகநேரம் பேசினார் என்றும் தெரிவிக்கப்பட்டது

இவ் விவகாரம் குறித்து இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் அடுத்தவாரம் திரு. கார்ட்டருடன் பேச்சு நடத்துவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது (இ)

# இந்தியபொலிஸ் படையை மறுசீரமைக்க வலியுறுத்து

புதுடில்லி, ஏப்ரல் 9

பொதுமக்களுடன் மனிதப் பண்பாட்டுடன் நடந்துகொள்ளக்கூடிய விதத்தில் இந்திய பொலிசாருக்குப் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

இதுகுறித்து புதுடில்லியில் நேற்று நடைபெற்ற மாநில முதல்வர்கள், கவர்னர்கள் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

பெரும்பாலான மாநில கவர்னர்களும் முதல்வர்களும் இதை வலியுறுத்தினர்.

இந்திய பொலிஸ் படையை மறுசீரமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (இ)

# இந்தியா சார்பில் இந்திரா

புதுடில்லி, ஏப்ரல் 9

ஸிம்பாப்வே ரொடீஷியாவின் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் இந்தியாவின் சார்பில் திருமதி இந்திரா காந்தி கலந்துகொள்கிறார்.

இம்மாதம் 17ம் திகதி சாலிஸ்பரியில் நடைபெற இருக்கும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதற்காக திருமதி காந்தி 16ம் திகதி புதுடில்லியிலிருந்து புறப்படுகிறார். (இ)

# பிரிட்டிஷ் ஆதரவை அமெரிக்கா கோருகிறது

லண்டன், ஏப். 9

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்டுள்ள நடவடிக்கைக்கு பிரிட்டனின் ஆதரவு கோரப்பட்டுள்ளது.

பிரிட்டனிலுள்ள அமெரிக்கத் தூதுவர் பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சின் உயர் அதிகாரிகளைச் சந்தித்து அமெரிக்க அரசு சார்பில் இந்தக் கோரிக்கையை விடுத்தார்

# ஜனத்தொகை மதிப்பீட்டிற்கு ரூபா 40 கோடி

புதுடில்லி, ஏப்ரல் 9

1981ம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ள 40 கோடி ரூபா செலவாகும் என்று இந்திய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

# "சோவியத்தைப் பொறுத்தவரை நட்புறவு என்றால் ஆக்கிரமிப்பு என்பதே அர்த்தம்"

(கொழும்பு)

"சோவியத் யூனியன் ஒரு நாட்டுடன் நட்புறவு ஒப்பந்தம் செய்துகொண்டால் அந்த நாடு ரஷ்யாவின் நோக்கத்தை நிறைவேற்ற வேறொரு நாட்டை ஆக்கிரமிக்க வேண்டும். இல்லையேல் அந்தநாடு ஆக்கிரமிக்கப்படும். கடந்த கால சம்பவங்கள் இதை எங்களுக்கு ஞாபகமூட்டுகின்றன"

ரஷ்ய ஆக்கிரமிப்பை கண்டித்தும், ஆப்கானிஸ்தான் மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும், பேருவளை நகரசபை மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில பேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்ட்) செயலாளர் குழு உறுப்பினர் திரு. வி. ஏ. கந்தசாமி மேற்கண்டவாறு கூறினார்.

ஆப்கானிஸ்தான் மக்களுக்கு ஆதரவு நல்கும் பேருவளை கமிட்டியினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கூட்டத்திற்கு சட்டத்தரணி ஜனப் ஹுசேன் சாலி தலைமைவகித்தார்.

திரு கந்தசாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

சோவியத்யூனியன் இந்தியாவுடன் நட்புறவு ஒப்பந்தம் செய்துகொண்டதும் இந்தியா பாகிஸ்தானுக்கு எதிராகப் படையெடுத்து அதைப் பிளவு படுத்தியது. சோவியத்யூனியன் வியட்நாமுடன் நட்புறவு ஒப்பந்தம்செய்துகொண்டதும் கம்போடியா ஆக்கிரமிக்கப்பட்டது. சோவியத் யூனியனுடன் ஆப்கானிஸ்தான் நட்புறவு ஒப்பந்தம் செய்துகொண்டதால் ஆப்கானிஸ்தானே இப்பொழுது ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. சோவியத்யூனியனைப் பொறுத்தவரையில் நட்புறவு என்றால் ஆக்கிரமிப்பு என்பதே அர்த்தம்.

அழைப்பின் பேரில் தான் ஆப்கானிஸ்தானில் பிரவேசித்ததாகவும் சோவியத் - ஆப்கான் நட்புறவு ஒப்பந்தத்தின் பேரில் அந்த நாட்டைப் பாதுகாக்கச் சென்றதாகவும் கூறும் சோவியத்யூனியன், அழைப்பின் பேரில் சென்றிருந்தால் ஏன் ஆப்கான் ஜனதிபதி ஜனப் அமீனை படுகொலை செய்யவேண்டும். அழைத்தவர்களைப் படுகொலை செய்வது தான் நட்புறவா?

# ஆஸி. பிரதமர் எச்சரிக்கை

சிட்னி, ஏப். 9

ஈரான் மாணவர்கள் வசமுள்ள அமெரிக்க பணயக் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்படாவிடின் ஈரானுடனான ராஜதந்திர உறவுகளை தொடர்ந்தும் வைத்திருப்பதா என்பது குறித்து ஆஸ்திரேலியா ஆலோசனை செய்யும்.

இவ்வாறு ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. அண்ட்ரூ பீக்கொக் தெரிவித்துள்ளார். (இ)

# நாடகங்கள்

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்கலைக் கழக தமிழ்ச்சங்க நிதிக்காக யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்இன்று மாலை இரண்டு நாடகங்கள் மேடை யேற்றப் படுகின்றன.

விரிவுரையாளர்கள் நடிக்கும் "திசை மாறிய பறவைகள்" நாடகமும் மாணவர்கள்வழங்கும் "கடலின் குழந்தைகள்" நாடகமும் இன்று நடைபெறுகின்றன.


# டீசல் எண்ணை மோசடி?

(மன்னார்)

மன்னார் ப.நோ.கூ.சங்கத்தின்சிறுத்தோப்பு எரிபொருள் விற்பனவு நிலையத்திற்கு "பவுசரில் கொண்டுவரப்பட்ட டீசல் எண்ணையை பிறிதொரு பவுசரில் நிரப்பும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது டீசல் எண்ணையில் மோசடி செய்ததாக பெற்றோலிய சட்டுத்தாபன சாரதியொருவரும் போர்ட்டர் ஒருவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இம் மோசடி சம்பந்தமாக முகாமையாளர் விசாரணை நடத்தி வருகிறார்.


# ஓர்தீன் வெற்றிவீரன்




பயிர்க்கொட்டிகள், கனி துளைக்கும் பூச்சிப்புழுக்கள் உங்கள் வெங்காயம், மிளகாய், கத்தரிக்காய், கோவா போன்ற பயிர்களை நாசம் செய்கின்றனவா?

ஓர்தீன் S. P. 75 இந்தப் பூச்சிப்புழுக்களை அழித்து கூடுதலான விளைச்சலைத் தருவதோடு நெற்பயிர்களைத் தாக்கும் பூச்சி புழுக்களையும் அழிக்கவல்லது.

யாழ்ப்பாணம் தின்னைவேலியில் மேற்கொள்ளப்பட்ட திறன்காண் சோதனையில் சாதனையை நிலைநாட்டிய ஓர்தீன் S. P. 75 ஒரு ஹாகுரேஸ் விவசாய ரசாயனம்

எல்லா ஹாகுரேஸ் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.




ஹரிசன் அன்ட் குரேஸ்பீல்ட் (கொழும்பு) லிமிட்டெட்.

330, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5th CROWDED WEEK
REGAL JAFFNA Phone: 360
Daily 4 shous
Daily at a. m. 2-00, 4-30, 7-00 & 9-30 p.m.
ROGER MOORE as JAMES BOND
LIVE AND LET DIE
(More suited for Adults)

ராஜா - (யாழ்நகர்) கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-கவிதா-சந்திரமோகன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்

வெலிங்டன் Daily 10-30 a. m., 2-15, 4-45, 7-00, & 9-30 p.m.
(யாழ்ப்பாணம்)
Horror of Frankenstein
(Strictly for Adults)

லிடோ தினசரி 10-30, 2-30, 4-45, 7-15 & 9-30
(யாழ்.நகர்) போன்: 7698
DIAMONDS

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த், மலேசியா சிவாஜி ராஜா, மனோகுமார்
நடித்த
நெஞ்சுக்கு நீதி
இது ஒரு இலங்கை - இந்திய - மலேசிய கூட்டுத் தயாரிப்பு

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-எல். விஜயலட்சுமி
வல்லவன் ஒருவன் (புதிய பிரதி)
12-4-80 முதல்
ராஜபார்ட் ரங்கதுரை
(ஈஸ்ட்மன் கலர்—புதிய பிரதி)

வின்ஸர் தொலைபேசி: 466
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
தினசரி: 10-30, 1-30, 4-30, 7.15, 10-00
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

ஸ்ரீதர் [இன்று மட்டும்]
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-கே. ஆர். விஜயா, சுந்தரராஜன்
நடித்த
திருடன் (புதிய பிரதி)
11-4-80 முதல் புத்தாண்டு வெளியீடு:
இரத்தத்தின் இரத்தமே (ஈஸ்மன் கலர்)

மகத்தான தமிழ் சிங்களப் புத்தாண்டு வெளியீடு!
சாந்தி யாழ் நகர் போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
ராஜேஷ் கன்னா (இரட்டைவேடம்), சர்மிலாதாகூர்
"டாஹ்" ஹிந்தி ஈஸ்ட்மன் கலர்
இசை: லக்ஷ்மிகாந்த் பியோரலால். காதுக்கினிய பாடல்கள், கண்கவர் நடனங்கள். பரபரப்பூட்டும் பயங்கரச் சண்டைக் காட்சிகள் யாவும் ஒருங்கே அமைந்த வண்ணத் திரையோவியம்.
"DAAG" Hindi in Eastman color
RAJESH KANNA (Duel Role), SHARMILA TAGORE
Music: Laxmikant Pyarelal
Full of Music & Action Packed Movie

# இன்றைய பலன்

**பங்குனி மாதம் 28-ந்திகதி (10-4-80) வியாழக்கிழமை**

மேடம்: அறிவாற்றலை வளர்ப்பதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கையை எடுப்பீர்கள் புலவர்கள் போற்றப்படுவார்கள் புதிய வாகனம் கொள்வனவு செய்வதில் சிலர் ஈடுபடலாம். நல்ல நாள்:

இடபம்: வசதிகள் பெருகும், வாழ்க்கையும். வளமாகும். தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். இன்று சுபநாள்.

மிதுனம்: வயிற்றுக்கோளாறு தோன்றக்கூடும். உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். வேவுக்களைத் தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர் நண்பர் ஒருவருடன் மோதல் ஏற்படலாம் அமைதி நன்று.

கடகம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். காதலர்கள் வாழ்வில் தித்திப்பான சம்பவங்கள் நடைபெறும். புத்திர வழியாலும் மகிழ்ச்சியுண்டு.

சிங்கம்: விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும். மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம் இன்று சும்மா இருப்பதே சுகம்

கன்னி: உள்ளப்படுதாவில் உவகை கூத்தாடும். உறவினர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள். பத்திரிகைத் துறையில்தொழில்புரிவோர் பாராட்டுதலைப் பெறுவார்கள்.

துலாம்: தங்கள்குணம் மேலிடும். தக்க மதிப்பும் கிடைக்கும். இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும். உழைப்பினுல் நற்பலனும் உற்சாகமும் பிறக்கும்.

விருட்சிகம்: மணவாழ்வில் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும். குழந்தையின் முன்னேற்றம் திருப்தியை அளிக்கும். வருமானத்திலும் உயர்ச்சி கிடைக்கும். புதுமனை கட்டுவதற்கு நல்ல நாள்.

தனு: மெச்சத் தகுந்த நடவடிக்கையின் மூலம் உங்களைத் துச்சமாக மதித்தவர்களைக் கூட அடிபணிய வைப்பீர்கள். பொருள் வளத்தில் புதுப் பொலிவு காணப்படும். சில பிறந்தகத்தின் எண்ணம் தலைதூக்கும்.

மகரம்: நிச்சயமற்ற நிலையால் வேதனைப்படுவீர்கள். எதிர்பார்த்த பொருள் வரவு இன்றுதடைப்படலாம். உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும். உங்கள் விடயத்தில் சுகாதாரம் விரும்பத்தக்கது. நலிவுக்கு இடமுண்டு. நாவடக்கம் விரும்பத்தக்கது.

கும்பம்: இனிய வார்த்தைகளின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள். பொருள்வரவுக்கும் இடமுண்டு. சுற்றுடலில் மதிப்பு உயரும் பெரியவர்களே உங்கள் ஆலோசனைகளைக் கேட்க முன்வருவார்கள். இறை அருளும் உண்டு.

மீனம்: நினைத்த காரியத்தில் தடை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். சிலரின் கண்டனங்களுக்கு இலக்காக நேரிடலாம்- மனத்திடம் விரும்பத்தக்கது.

சோதிடக் கலாநிதி
**திருமலை க. வேலுப்பிள்ளை**

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
K. R. விஜயா
பால்மனம்
(புதிய பிரதி)

வெஸ்லி
(கல்விப்பாய்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
நாகேஷ்

# இன்றைய கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி

(பலாலி)

வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம் நடாத்தும் அமரர் செல்லப்பா குமாரசாமி ஞாகார்த்தக் கேடயத்திற்கான மின்னொளி கரபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று இரவு 7-00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

ஒவர்-கேம் 6 வீரர் போட்டியில் சுன்னுகம் காந்திருபன் ஜனசமூகநிலையத்தை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் வி. க ஏயும் உரும்பராய்- புனித மிககேல் வி. க. வை. எதிர்த்து ஆவரங்கால் ஐக்கிய வி க வும் மானிப்பாய் - ஆனந்த வி. கழக 'ஏ'யை எதிர்த்து சவிலை பறக்கும் இளைஞர் வி. க. வும் போட்டியிடும் புத்தூர் உதயசூரியன் வி. க.வை எதிர்த்து ஏழாலை ஸ்ரீ முருகன் வி. க.வும், உடுப்பிட்டி சிவகுமரன் வி. க. 'பி' யை எதிர்த்து மானிப்பாய் ஆனந்தா வி. க. 'பி' யும் உடுவில் உதயசூரியன் வி கவை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய வி. க. வும் போட்டியிடும்

ஓவர்-கேம் 4 வீரர் ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய வி. க. வை எதிர்த்து உடுப்பிட்டி. சிவகுமரன் வி. க. பி யும் புத்தூர் உதயசூரியன் வி க. வை எதிர்த்து மானிப் ஆனந்த வி. க. பி யும் உடுப்பிட்டி சிவகுமரன் வி க'வை எதிர்த்து மானிப்பாய்ஆனந்த வி க. 'ஏ' யும் உடுவில் உதயசூரியன் வி. க. வை எதிர்த்து சுன்னுகம் காந்தருபன் வி. க. வும் போட்டியிடும்.

தொடர்ந்து இடம்பெறும் செற் - அப் ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரீ விக்னேஸ்வரா வி. க. வை எதிர்த்து யாழ்ப்பாணப் - டொலிஸ் வி. க. வும் போட்டியிடும். (ஈ)

## புனித - வளனூர் திருநாள்

(மன்னூர்)

தொழிலாளர்களின் தினமான மே தினத்தில் தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித வளனூர் சூசையப்பர் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடுவது என்று பனங்கட்டிக் கொட்டு வட்டார புனித - வளனூர் திருச்சபை நிர்வாகக்குழு தீர்மானித்துள்ளது.

புனித-வளனூர் திருநாளன்று திருப்பலியும், மாலையில் புனித-வளனூர் சுற்றுப் பிரகாரமும் அதைத், தொடர்ந்து கைத்தொழில் உபகரணங்கள் ஆசீர்வதிக்கப்படும் அதனைத் தொடர்ந்து பொதுக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன.

## சனசமூக நிலைய நிர்வாகிகள்

(கோண்டாவில்)

தாவடி சிவசக்தி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சனசமூக நிலைய நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: அ. பேரின்பநாயகம், காரியதரிசி: க. சுந்தரலிங்கம், தனாதிகாரி: இ. பொன்ராசா, உபகாரியதரிசி இ. தவராசா, உபதனாதிகாரி நா. பரமேஸ்வரன், நிலையப் பொறுப்பாளர் இ. தில்லைராசா, பரிசோதகர்: வ. தெய்வேந்திரம், கலை நிர்வாகி: மு. கந்தசாமி.

## கல்வளை பிள்ளையார் கோவில் ஆலய நிர்வாகிகளுக்கு இயக்கம் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

செந்தமிழ்க் கவிஞர் சின்னத்தம்பிப் புலவரினால் பாடப்பெற்ற திருத்தலமான கல்வளை பிள்ளையார் கோவில், சகல மக்களினதும் வழிபாட்டுக்குத் திறந்து விட்டதையும் மூன்று ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உற்சவம் தொடர்ந்து நடைபெறுவதுடன் கோவில் திருவிழா உரிமையை பகிர்ந்தளிக்க ஆலய நிர்வாகம் செய்துள்ள முடிவு குறித்தும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் வரவேற்று, பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இந்த ஆலய நிர்வாகிகளின் வழியைப் பின்பற்றி ஏனைய கோவில் நிர்வாகிகளும் ஆலயங்களைத் திறந்து விடுவார்கள் என்று இயக்கத் தலைவர் திரு. கே கிருஷ்ணபிள்ளை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்

நாகர்ஸ் (சுன்னுகம்)
தினசரி 6 45, 9-45
சனி, ஞாயிறு 4-45
சந்திரபாபு
கவலை இல்லாத மனிதன்

## கோவிலில் திருட்டு

[நெல்லியடி]

அல்வாய் முத்துமாரியம்மன் ஆலயத்திலுள்ள வைரவர் ஆலயத்தில் திருடர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளதுடன் கோயில் உண்டியலையும் உடைத்துள்ளார்கள்.

வைரவர் விக்கிரகத்தைப் பெயர்த்து தகடுகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகப் பருத்தித்துறைப் பொலிஸ்நிலையத்தில் புகார்செய்யப்பட்டுள்ளது. மேற்படி திருட்டுச் சம்பந்தமாக எவரும் கைதுசெய்யப்படவில்லை. பொலிசார் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டுள்ளார்கள். [அ]

## அறைக்குள் விழுந்த காவலாளி

(கோண்டாவில்)

நள்ளிரவில் கூரை மேல் ஏறிய காவலாளி தவறிஉள்ளுக்குள் வீழ்ந்தார். இச் சம்பவம் கொக்குவில் கிராமச்சபை நூலகத்தினுள் நடந்துள்ளது. இது பற்றி மேலும் தெரிய வருவதாவது-

இரவு நேரத்தில் தற்காலிகமாக காவலாளியாகக் கடமை புரிகின்றவர் நள்ளிரவில் நூலகக் கூரையின் மேல் ஏறி வீழ்ந்துள்ளார். இவர் பூட்டிய அறையினுள் வீழ்ந்தமையினுல் காயத்துடன் உள்ளிருந்தே அயலவர்களின் உதவியை நாடினூராம்.

பூட்டிய அறையினுள் இருந்து நள்ளிரவில் ஏற்பட்ட சத்தத்தினுல் அயலில் உள்ளவர்கள் வந்து பார்த்தபொழுது இரவுக் காவலாளி நூலகத்தினுள் வீழ்ந்து காயம் அடைந்த நிலையில் காணப்பட்டாராம் அயலவர்கள் இவரைவைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றார்கள்.

இச் சம்பவம் பற்றி நூலகத்திற்குப் பொறுப்பானவர்கள் கிராம சபையின் காரியதரிசிக்கும் அறிவித்துள்ளார்கள்.

## சிறையிலிருந்து மூவர் தப்பினர்

(கொழும்பு)

கெக்கிராவ மாஜிஸ்ரேட் சிறையிலிருந்து மகிபால, சுனில் ரூபசிங்க அல்லது ஜக்கடையா என்ற மூவர் தப்பி ஓடியுள்ளனர்.

22 வயதுடைய மகிபாலவின் 2 புயங்களிலும் இரு பறவைகளின் உருவமும் இடதுகையில் 'தபத்தா' என்ற பெயரும் பச்சை குத்தப்பட்டுள்ளது. சுனிலின் வலது கையில் 'கிறிஸ்' கத்தியும் இடது கையில் சிலுவை அடையாளமும் யேசு என்ற பெயரும் பச்சை குத்தப் பட்டுள்ளன.

ரூபசிங்கவின் முதுகில் பெண்ணினதும் பாம்பு ஒன்றினதும் உருவம் பச்சை குத்தப்பட்டுள்ளது. [ஐ]

# நல்லையாவின் மறைவுக்கு சபையில் அனுதாபம்

(கொழும்பு)

அண்மையில் காலமான முன்னாள் செனட்டர் ஜி. நல்லையாவின் மறைவையொட்டி அனுதாபத் தீர்மானம் ஒன்று நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தின்மீது எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உரையாற்றுகையில், "நல்லையாவின் மறைவினால் சிறந்த சமூகத் தொண்டனை நாடு இழந்துவிட்டது. இளம் வயதிலிருந்தே அமரர் நல்லையா சமூக அநீதிக்கும், சாதிக் கொடுமைக்கும் எதிராகக் குரல் கொடுத்த வீரனாகத் திகழ்ந்தார். இந்த பிரச்சினையை எதிர்த்துப் பேச, மற்றவர் அஞ்சியிருந்த வேளைகளில் இவற்றை எதிர்க்கும் இயக்கத்தில் தமிழரசுக்கட்சியின் முன்னணி வீரனாகத் திகழ்ந்தார்" என்று கூறினர்.

"மொழி உரிமை, அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டபொழுது அவற்றிற்கு எதிராக அமரர் நல்லையா போராடினர். எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் தமிழ் சமுதாயத்தில் சமத்துவத்தை நிலைநாட்ட முயன்றர். 1957-ம் ஆண்டு யாழ். சிறைச்சாலையில் அடுத்தடுத்த அறைகளில் நானும் அமரர் நல்லையாவும் சிறை வைக்கப்பட்டிருந்தோம். 1958-ம் ஆண்டு என்னோடு நல்லையாவும் மூன்று மாதம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

அவரின் உழைப்பின் பலனாகத்தான் சாதிக்கொடுமை ஓரளவிலாவது குறைந்திருக்கிறதென்றும் அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறினர்.

சிறீ லங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் இத்தீர்மானத்தின் மீது உரையாற்றிய மதவாச்சி எம். பி. திரு. மைத்திரிபால சேனநாயக்கா பேசுகையில், "அமரர் நல்லையாவும் நானும் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் ஒன்றாகக் கல்வி பயின்றோம். அப்பொழுதிலிருந்தே அவரை எனக்கு நன்றாகத் தெரியும். வாழ்நாள் முழுக்க இவர் தனது சமூகத்தின் விடுதலைக்காகவே போராடி வந்தார் என்றர்.

இவ் அனுதாபத் தீர்மானத்திற்கான பிரேரணையை பாராளுமன்ற விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வின்சென்ட் பெரேரா கொண்டுவந்தார். (ம-சு)

# ராசராஜேஸ்வரன் வழக்கு தள்ளுபடி

[யாழ்ப்பாணம்]

பொதுத்தேர்தல் செலவுப் பட்டியலை அனுப்பவில்லை என்று சட்டத்தரணி இராஜ ராஜேஸ்வரன் தங்கராசா மீது குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு நேற்று தள்ளுபடி செய்யப்பட்டது.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் திரு. ரி. யோகநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் கடந்த பொதுத்தேர்தலில் நல்லூர்த் தொகுதியில் போட்டியிட்ட சட்டத்தரணி இராஜராஜேஸ்வரன் தங்கராசா தேர்தல் செலவு பட்டியலை அனுப்ப தவறிவிட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி என். சோமசுந்தரம், ஜிம்மி ராசரத்தினம், எஸ். எஸ். பிரான்சிஸ், சி. பரமசிவம் பிள்ளை, சி. அமிர்தலிங்கம், எஸ். கே. கேசவன், எஸ். கனகசபாபதி, ரி. சோமசுந்தரம், எம். சுந்தரலிங்கம், வி. அந்தோனிப்பிள்ளை, எஸ். கிருஷ்ணகுமார், எஸ். ராஜசூரியர், எஸ். தியாகேந்திரன், எம். இமாம், வி. முத்துவிநாயகம், ரி. நடராசா, வின்சன்ட் பாலசிங்கம், எஸ். செல்வராசா, செல்விகள் அபிமன்னசிங்கம், பாலசிங்கம், மனுவேல்பிள்ளை உட்பட 33 பேர் ஆஜரானர்கள். அரசதரப்பில் சட்டத்தரணி ரொனி பெர்னாண்டோ ஆஜரானர்.

எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி என். சோமசுந்தரம் செலவுகள் இல்லாதபடியால், செலவு பட்டியலை அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்படவில்லையென தமது வாதத்தின் போது கூறினர்.

விசாரணையின்பின் நீதவான் வழக்கை தள்ளுபடிசெய்தார். (க-கு)

# லாபப்பணம் முழுவதும் ஊழியர்க்கு வழங்கப்படும்
## நல்லூர் ப.நோ.கூ. சங்கம் முடிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ப. நோ. கூ. சங்க ஊழியர்களுக்கு இவ்வாண்டு புத்தாண்டுப் பரிசாக 300 ரூபாய்க்கு குறையாத தொகையை போனஸாகவழங்கப்படவுள்ளது.

1974-77ம் ஆண்டுகளில், சங்கத்திற்கு நிகரலாபமாகக் கிடைத்த 24,000 ரூபாவையும் ஊழியருக்கு போனசாக வழங்க சங்க நிர்வாகம் அண்மையில் கூடிய நிர்வாகசபைக் கூட்டத்தில் முடிவு செய்துள்ளது.

கடந்த காலங்களில் சங்கம் எதுவித தொகையையும் நிகரலாபமாக எடுக்கவில்லை. (கெ-சு)

## மரண அறிவித்தல்
### திருமதி நல்லம்மாசிவசுப்பிரமணியம்

இணுவில் கிழக்கு திருமதி நல்லம்மா சிவசுப்பிரமணியம் காலமானர். இவர் யாழ்ப்பாணம் ஸ்ரீ வரதாஸ் புடவை மாளிகை உரிமையாளர் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சுபேந்திரன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். ஈமக்கிரியைகள் இன்று (10-4-80) வியாழக்கிழமை காலை பத்து மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். 5455

# 3 வது முயற்சியில் எண்ணம் கைகூடியது

[யாழ்ப்பாணம்]

தற்கொலை செய்யப்போவதாக அடிக்கடி கூறிவந்த இளைஞர் ஒருவர் கடைசியில் தற்கொலை செய்து கொண்டார்.

நீர்வேலியைச் சேர்ந்த மாணிக்கம் மகாலிங்கத்தின் மரணவிசாரணையில் மேற்கண்ட தகவல் தெரிய வந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ்.எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினர்.

இறந்தவர் மது அருந்தும் பழக்கமுள்ளவராக இருந்ததால் வீட்டில் பிரச்னையிருந்ததாகவும் ஒருசமயம் தற்கொலை செய்ய கையை வெட்டினரென்றும் மற்றொருசமயம் தற்கொலை செய்ய கழுத்தில் கம்பியை சுற்றினரென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

சம்பவம் நடந்த தினம் 17 ரூபாவை கொண்டுவந்து வீட்டில் கொடுத்துவிட்டு அதில் 15 ரூபாவை வாங்கிச் சென்று நன்றாகக் குடித்துவிட்டு வந்து தான் நச்சு திராவகம் அருந்தி விட்டதாக கூறினர் என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

உடனடியாக நல்லெண்ணெய் பருக்கிய பின் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானர் தற்கொலை எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. [க]

# செங்கலடி கொள்ளை வழக்கு

[கொழும்பு]

செங்கலடி கிராமிய வங்கிக் கொள்ளை வழக்கின் எதிரிகளை பிணையில் விடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பு இம்மாதம் 18-ம் திகதி வழங்கப்படும்.

கொழும்பு மேல் நீதி மன்றத்தில் நேற்று இம்மனு மீதான தீர்ப்பு வழங்கப்படவிருந்தபோதிலும் 18-ம் திகதியே வழங்கப்படும் என்று நீதியரசர் திரு.ஓ. எஸ். என். செனவிரத்தன தெரிவித்தார். [ம-கு]

# சௌந்தர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவொரு உறவையும் கொண்டிருக்காது என்று தெரிவித்துள்ள திரு. சௌந்தரபாண்டியன் "தமது ஆதரவாளர்களுடன் கலந்தாலோசித்த பின்னர் தி. மு.க. இந்திரா காங்கிரஸ் கூட்டணியில் சேர்ந்து போட்டியிடும்" என்றர். (கு)

# சிறந்த பஸ்சாரதிகள் தெரிவாவர்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்து சபையின் சிறந்த சாரதி, சிறந்த நடத்துனர் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் ரோட்டரி சங்கத்தின் ஆதரவுடன் இத்தெரிவுநடைபெற விருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளை வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் திரு. டட்லி குணசேகரா செய்துள்ளார். (க)

வெளிநாடு செல்ல

# தாயார் பணஉதவி மறுப்பு! இளைஞர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

வெளிநாடு செல்வதற்கு தாயார் பணம் கொடுக்காததனல் மனமுடைந்த இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த 22 வயதான பாலசுப்பிரமணியம் ஸ்ரீகாந்தனின் மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினர்.

இளைஞர் தாயாரிடம் வெளிநாடு செல்ல பணம் கேட்டதாகவும், வருட முடிவில் காணி ஈடு வைத்து பணம் தருவதாக தாயார் கூறியதாகவும், சம்பவத்திற்கு முதல் தினமும் பணம் கேட்டதாகவும், கோவிலுக்குச் சென்று திரும்பிய தாயார் புகை, வாழைப்பழம் கொடுத்ததாகவும், மாலை 5 மணிக்கு வெளியில் போய்விட்டு வந்து நச்சுத்திராவகம் அருந்தினரென்றும் விசாரணையில் கூறப்பட்டது

நச்சுத்திராவகம் அருந்துகையில் தாயார் போத்தலை தட்ட முயன்றதாகவும் அதற்கு முன் அவர் குடித்துவிட்டதாகவும், யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானரென்றும் மேலும் விசாரணையில் கூறப்பட்டது.

விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. (கொ-கு)

# படப்பிடிப்பில் தீவிபத்து;
## குதிரைகளும் பாகர்களும் காயம்

(சென்னை)

படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட தீவிபத்தில் எட்டு ஸ்டன்ட் நடிகர்களும் பத்து குதிரைகளும் காயமடைய நேர்ந்தது.

இச் சம்பவம் சென்னையிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள குடுவான்சேரிக் கிராமத்தில் நடைபெற்றது. எரிகாயங்களுக்குள்ளான பத்து குதிரைகளும் வேப்பேரியிலுள்ள அரசாங்க மிருக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டன. இரு குதிரைகள் கடுமையான எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளன.

"காளி" என்ற தமிழ்ப் படத்திற்கான 'சூட்டிங்' நடைபெற்றுக்கொண்டிருந்த பொழுது இச் சம்பவம் நடைபெற்றது. அதிகாலை 2 மணிக்கு நடைபெற்ற சூட்டிங்கின்போது பங்குபற்றிய பதினொரு குதிரைகளில் ஒரு குதிரை மட்டுமே காயங்கள் இன்றி தப்பியது. சூட்டிங் நடைபெற்ற பிரதேசம் முழுவதும் நெருப்புப் புகை மண்டலத்தினல் சூழப்பட்டது.

நெருப்பினல் சூழப்பட்ட தீவிலிருந்து சிலர் தப்பிச்செல்லும் காட்சியைக் காட்டுவதற்காகவே இவ்வாறு பெற்றோல் ஊற்றப்பட்டு நெருப்பு உண்டாக்கப்பட்டதாகப் படத்தயாரிப்பாளர் இதுபற்றித் தகவல் தெரிவித்தார்.

குதிரைகள் நெருப்பினல் பாதிக்கப்பட்டபொழுது அதில் சவாரி செய்தவர்கள் தூக்கி வீசப்பட்டனர். காயத்திற்குள்ளான கலைஞர்களும் குதிரைகளும் உடனடியாக நகர ஆஸ்பத்திரிக்கு வைத்தியசிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர்.

இப்படியான எதிர்பாராத சம்பவங்கள் மிகவும் அபூர்வமாகவே திரைப்பட உலகில் ஏற்படுவதாகப் படத்தயாரிப்பாளர் தெரிவித்தார். படப்பிடிப்பிற்காகக் குதிரைகளை வாடகைக்கு அமர்த்தியதாகவும் அவர்தெரிவித்தார். காயமடைந்த குதிரைகள் லொறிகளில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வெ)

# இரண்டு நாட்கள் மின்வெட்டு இல்லை

[கொழும்பு]

எதிர்வரும் புதுவருடத்தை முன்னிட்டு 12ம், 13ம் திகதிகளில் மின்வெட்டை நீக்கிவிடுவதென்று மின்சக்தி அமைச்சு முடிவுசெய்துள்ளது.

லக்சபானவிலுள்ள மின்சக்தி சாதனமொன்று பழுதடைந்ததையடுத்து மின்வெட்டு அமுலில் இருந்துவருகிறது.

பழுதடைந்த இச்சாதனத்தைத் திருத்தும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ள போதிலும்வெளிநாட்டுபொறியியலாளரின் சேவை தேவைப்படுவதால் இன்னும் 6 வாரங்கள் தாமதமாகலாம் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது. (கு)

# தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வவனியா, மன்னர், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக வவனியா கல்வி பிரதேசம் ஒன்று அமைக்கப்படவேண்டுமென்றும் எம். பி.க்கள் கல்வியமைச்சரைக் கோரினர்.

ஆசிரிய பயிற்சியை முடித்து வெளியேறிய தோட்டப்பாடசாலை ஆசிரியர்களுக்கு அரசாங்க பாடசாலைகளில் அல்லது தோட்டப் பாடசாலைகளில் நியமனங்களை வழங்குமாறும், சென்னை மத்திய கர்நாடக இசைக் கல்லூரியின் சங்கீத வித்துவான் பட்டம் பெற்ற இசை ஆசிரியர்களுக்குப் பட்டதாரிச் சம்பளம் வழங்குமாறும் எம். பிக்கள் கல்வியமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

இவர்களின் கோரிக்கைகளைச் செவிமடுத்த கல்வி அமைச்சர் திரு. ரனில் விக்கிரமசிங்கா இவை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதாகக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் உறுதியளித்தார் (ம-கு)

# நெல்கொள்வனவு

(நெல்லியடி)

வடபகுதி விவசாயிகளிடமிருந்து பெருந்தொகையான நெல்லைப்பெற்றுக் கொள்வதற்காக சில விசேட சலுகைகளை வழங்க நெற் சந்தைப்படுத்தும் சபை முன் வந்துள்ளது.

பெறப்படும் நெல்லுக்கான பணத்தொகை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், விவசாயிகள் தமது காணியிலிருந்து நெல்லை சபைக்கு எடுத்து வரும் போக்குவரத்துச் செலவினையும் நெற் சந்தைப்படுத்தும் சபையே பொறுப்பேற்க முன்வந்துள்ளது.

ஈழநாடு பத்திரிகை லிமிடெட் ... தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி63-ம் இலக்க அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 10-ம் ... அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office, Sri Lanka under No. QE/8948/78. The Eelanaadu, Post Box No. 49, Telegram: 'Eelanaadu'
Phone- 190

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org